www.akaram.eu



# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 9.07 திருவள்ளுவர் ஆண்டு 2053 | 14.01.2022 - 13.02.2022 | ISSN : 2195-6480


FREE Magazine



## 3 இலட்சம் இலங்கை மக்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியா?

## 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோருவது யாருக்காக?



## இஸ்லாமிய அணுகுண்டும் இஸ்ரேலின் அடாவடியும்

## வடக்கு கிழக்கின் தற்போதைய அரசியல்



யாருக்கு நன்மை தரும்
## காத்தான்குடி PRODUCTS

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

# Dortmund மாநகரில் மளிகை உலகின்

## BIGG BOSS

**மலிவும் தரமும்**
**என்றும் உங்கள் TKS**

TKS BEST FOODS

### காதலர் தினத்தை முன்னிட்டு
### சிறப்பு சலுகை

**100€** க்கு மேல்
கொள்வனவு செய்பவர்களுக்கு

~~149€~~

பெறுமதியுள்ள

V BOX



**95€** கிடைக்கும்

**வாடிக்கையாளர் அனைவருக்கும்**
**தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்**




Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de







## 20 countries

### 250 minutes

250 minutes from Germany to
20 countries.

250 minutes from Germany to EU

Internet Flat Highspeed up to 8 GB

Secure your + 5 GB bonus with the
Ortel  Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***




## Germany Flat

### 15 GB Internet

National Flat call rate

500 minutes from Germany to EU


Internet Flat 15 GB Highspeed

Secure your +5 GB bonus with the
Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

Now for 4weeks for "

**24,99€***




## 11 GB Internet Flat


Highspeed up to 11 GB

Secure your + 5 GB bonus with the
Ortel  Mobile app
(offer ends 15 december 21)

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***



**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play | App Store

Aufladbar mit: ortel mobile, O2, e-plus

AKARAM
# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 மார்கழி 2022 - 13 தை 2022

சுவடி / ISSUE 9.07

**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu

ISSN 2195-6480

**www.akaram.eu**

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் ஆங்கிலப் புது வருட மற்றும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பேருவகைக் கொள்கிறது.**

**தை மாதத்தைத் தமிழர் மாதமாக முதலில் அங்கீகரித்துப் பிரகடனப்படுத்திய உலக முன்னணி அரசுகளில் ஒன்றான கனேடிய அரசுக்கு உலகத் தமிழ் இனம் மிகப் பெரும் நன்றிக் கடனைப் பெற்றுள்ளது.**

உலக அரசுகள் ஈழத் தமிழ் மக்களையும், அவர்களின் அற்புதமான விடுதலைப் போராட்ட அமைப்பையும், அதன் அரசு நோக்கிய தமிழ் ஈழ அரசையும், உலகப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்து, தமிழ் இன அழிப்பை 2009ல் செய்த பின்னர், கனேடிய அரசு வழங்கிய இந்த அங்கீகாரம் திருவள்ளுவர் கூறிய "வானகமும் வையகமும் ஈடாகக் கொடுத்தாலும், கனேடிய அரசுக்கும், மக்களுக்கும் எம் இனம் பட்டுள்ள கடனை அடைக்க முடியாது".

எம் இனத்துக்கு இழைக்கப்பட்ட துரோகத்தில் முக்கிய பங்கு வகித்த தமிழ் அரசியல் தலைவர்களையும், சிங்கள அரசின் வெளி உறவு அமைச்சராகத் தேடித் தேடி, உலகத் தலைவர்களிடம் கெஞ்சிப் பெற்ற புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வைத்த செயலையும் ஒப்பிடும் பொழுது, கனேடிய அரசும், மக்களும்



எமக்கு வழங்கிய இந்த அதிகாரம் எத்தனை தூரம் மகத்தானது எனத் தெரிய வரும். அதனால் அதனைச் சாதித்துக் காட்டிய எமது அனைத்துக் கனேடிய அரசியல் செயற்பாட்டாளர்களையும், அவர்களுக்கு உறுதுணையாகச் செயற்பட்ட கனேடிய அரசியல் தலைவர்களையும் அகரம் நன்றியோடு நினைவு கொள்கிறது. உலக அரசியல் அரங்குகளில் எமது செயற்பாட்டாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு இந்த அங்கீகாரம் மிகப் பெரும் படிக் கல்லாக விளங்கும் என அகரம் கருதுவதால், இவ்வளவு முக்கியம் கொடுக்கிறோம்.

2019 நவம்பரில் தலைதூக்கிய 'கொரோனா -19' பெரும் நோய்த் தொற்று நூறு இலட்சத்துக்கும் அதிகமான மனித உயிர்களைப் பலி கொண்டதோடு, பல நூறு இலட்சம் உலக மக்களைத் தனது பிடிக்குள் வைத்து, மரண பயத்தை விதைத்தபடியே 2022 ஆம் ஆண்டை உலகம் நம்பிக்கையோடு வரவேற்கிறது.

அகரம் வரவேற்கிறது என ஒப்புக்காகச் சொன்னாலும், கொரோனாவின் தசாவதாரம் போன்ற பலவற்றுள் ஒன்றாக வந்துள்ள 'ஒமிக்கிறோன்' படு வேகமாக உலக நாடுகளில் பரவி வருவது, மாபெரும் அச்சுறுத்தலாக உள்ளது. மருத்துவ அறிவியல் உலகமும், உலக அரசுகளும் மக்களுக்கு நம்பிக்கை தரும் செய்திகள் எதனையும் இதுவரை வெளியிடவில்லை. இவற்றுக்கு மத்தியில் 2022 புத்தாண்டு பிறக்கிறது. எமக்கு விதி மீதும், கடவுள் மீதும் அதீத நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கையை 'குருட்டு நம்பிக்கை' என்றும் 'மூட நம்பிக்கை' என்றும் கேலி செய்யும் அரைகுறை பகுத்தறிவு வாதிகளின் மத்தியில், இந்த நம்பிக்கைகள்தான் எம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஏற்றே ஆகவேண்டும்.

தாயகத்தில் எமது அரசியல் வானில் பல இடி, மின்னல்கள் தோன்றிய வண்ணமே உள்ளன. அவற்றில் சுமந்திரன், சாணக்கியன் எனும் அபூர்வ சகோதர்களின் திருவிளையாடல்கள், பல நாடகக் காட்சிகளை அரங்கேற்றம் கண்டுள்ளன. அரசியல் வானில் இனி இவர்களின் காலம் எனச் சில ஊது குழல்கள் இப்பொழுதே ஊதத் தொடங்கி விட்டன. அந்த ஊது குழல்களுக்கு வேண்டிய அளவு பணத்தைக் கொட்ட இலங்கை, இந்தியா, சீனா எனப் பல செல்வந்த வள்ளல்கள் இருக்கிறார்கள். இவற்றுக்கு மத்தியில் பிச்சை ஓட்டுக்கும் வக்கற்ற நிலையில் அகரம் தனது மக்களுக்கான அரசியலைப் பேசத் தவிக்கிறது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிகூட அறம் சார்ந்து, தமிழ் மக்களின் அரசியலைச் செய்யவில்லை. 1948 ஆம் ஆண்டு மலையகத் தமிழரின் குடி உரிமை விடயத்திலும் சரி, தான் கொண்டிருந்த கொள்கையைத் தொண்டமான் மேல் சுமத்தி, மலையகத் தமிழரைக் கைவிட்டது.1956 ஆம்ஆண்டு தனிச் சிங்களச் சட்டம், 1972 ஆம் ஆண்டு குடி அரசுப் பிரகடனம், இரண்டும் அன்றைய சோல்பரி அரசமைப்புச் சட்டத்தை மீறியவை. பிரித்தானிய சட்டங்களின் படி, பேராடி நீதி பெறும் வழிகள் இருந்தும், சிங்களத் தலைமைகளின் கால் செருப்பாகத் தமிழ் மக்களை அடகுவைத்த கட்சிதான் இலங்கைத் தமிழரசுக் கட்சி.

பொருளியல் நிபுணர்களின் பார்வையில் ஜனவரி 18ந் திகதியின் பின்னர், இலங்கை அரசினால் தனது அன்றாடச் செலவினத்தை எப்படி, எந்த வகையில் தீர்க்கப் போகிறது? என்பதை, எங்கிருந்து, எவரிடம் இருந்து கடன் உதவியைப் பெறப் போகிறது என்பதில் தங்கி உள்ளது. மொத்தத்தில் முழுத் தேசமும் அழிவின் விழிம்பில் உள்ளது என்பதே உண்மை. இதற்கானத் தீர்வை 2022 ஆம் ஆண்டு தர வேண்டிய கட்டாயத்தில் இந்தப் புது வருடம் பிறக்கிறது.இப்படியான கவலைகளுக்கு மத்தியில் உங்களிடம் இருந்து விடைபெறும்..

**ஆசிரியர், அகரம் குழுமம்**

த. எதிர்மன்னசிங்கம்



# 3 இலட்சம் இலங்கை மக்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியா?

## இனச் சுத்திகரிப்பா
## வியாபாரமா
## விபச்சாரமா

1915ல் இந்திய வம்சாவழி வர்த்தகர்களை அடித்து விரட்டியது. 1945ல் மலையகத் தமிழர்களின் குடி உரிமையைப் பறித்து, நாடு கடத்தியது. 1956ல் ஈழத்தமிழ் தலைவர்களைப் பாராளுமன்ற வாசலில் அடித்து, கடல் ஏரியில் எறிந்து, தமிழரின் இரத்தத்தை ருசி பார்த்தது. 1958ல் தமிழ் மக்களை அடித்து, கப்பல்களில் ஏற்றி, வடக்கு கிழக்கு நோக்கி விரட்டியது. படிப்படியாகத் தமிழர்களை அழித்து, 2009ல் இனப் படு கொலைகளைச் செய்து, இன்றுவரை தமிழரின் சொத்துகளையும், உயிரையும் பறித்து பலி எடுத்தபடியே கொடுங் கோலாட்சியைத் தொடருகிறது.

சிங்களத்தின் இனவெறி அடங்கவில்லை. அதனால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து சீனா, அமெரிக்கா, இந்தியா என எல்லா நாடுகளிடமும் கடன்களை வாங்கியும், நாட்டின் பல பகுதிகளை 99 வருட குத்தகையிலும் அறுதியாக விற்பனை செய்தும், நிதி நெருக்கடி நின்ற பாடில்லை. அதனால் 1915 தொடக்கம் இலங்கையின் ஆட்சியாளர்கள் செயற்படுத்துவது ஆரிய சிங்கள பௌத்த பேரினவாதமே!. சிங்களத் தலைவர்கள் அனைவருமே இலங்கையின் சிங்கள இனவெறிச் சித்தாந்தத்தின் தந்தையான அநகாரிக தர்ம பாலா என்ற துறவுப் பெயரைக் கொண்டுள்ள, டொன் கரோலிஸ் கேவாவிதாரன எனப்பட்ட, புரட்டஸ்தாந்து மதக் குடும்பத்தில் பிறந்த சிங்களவனே!. அவன் வழியில் வந்த பரம்பரையின் கொலைவெறிக் காட்சி இது.

அரசால் அடித்து விரட்டப் பட்டு, புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் வளத்தைக் கொண்டு முதலீடு செய்யச் சொல்லிப் பகிரங்கமாக ஐ.நா.வில் கோட்டபாயா நேரிலே அழைப்பும் விட்டார். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அமைப்பு இலங்கைக்குத் தைத்த ஆடைகளுக்கு வழங்கிய வரிச் சலுகையை மீளக் கேட்டும் பார்த்தது. யாரும் இலங்கை அரசின் பசப்பு வார்த்தைகளை நம்பத் தயாராக இல்லை. அப்படியான கையறு நிலையில், இலங்கை 3 இலட்சம் மக்களை யப்பான், கொரியா, றுமேனியா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அதன் மூலம் 8 பில்லியன்அமெரிக்க டொலர்களை வருவாயாகப் பெறமுடியும் என இலங்கையின் நிதி அமைச்சர் எதிர் பார்க்கிறாராம். அமெரிக்க அரசு பிரசவித்த இலங்கையின் புதிய நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இப்படியான புரட்சி கரமான திட்டத்தைக் கையில் எடுப்பதற்குப் பிண்ணணியில் அமெரிக்க, இந்திய அரசுகளின் ஆதரவு இருக்கலாம் என்கிற ஐயம் எழுகிறது.

இதனால் அண்ணை மகிந்த ராஜபக்ஷ வைத்திருந்த நிதி அமைச்சர் பதவி பறிக்கப் பட்டதா? அல்லது பழம் புளித்து எறிந்ததைத் தம்பி பசில் எடுத்துக் கொண்டாரா? அல்லது தமிழ் இன அழிப்பைச் செய்த சக்திகள் மீளவும் இணைந்து, இலங்கை அரசை உசுப்பும் வகையில் செயற்படத் துணை போகின்றனவா? என்கிற கேள்விகள் எனக்குள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அமெரிக்க அரசு வழங்கும் 600 மில்லியன் டொலர் கடன் என்பது திரிகோணமலை கடற்படைத் தளத்திற்கான விலையாகத்தான் எனக்குத் தெரிகிறது.

இந்த டீலோடு இந்தியாவுக்கும் ஒரு லட்டு விட்டது. இலங்கை வடபகுதி தீவுகளில் சீனா தொடங்க இருந்த மின்சார நிலையங்களை நிறுத்திவிட்டுத் தன் கவனத்தை மாலைதீவுப் பக்கம் திருப்பி விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. 'நம்ம ஊரில மாடு வாங்கினது போலவும் ஆச்சு, அண்ணைக்கும் பொம்பிளை பார்த்தது போலவும் ஆச்சுது' என்கிற தம்பியின் பேச்சைப் போலத்தான் இதுவும் தெரிகிறது.

600 மில்லியன் டொலர் கடனில் கடற்படைத் தளத்திற்கு பணம் கொடுத்ததும் ஆச்சு, இலங்கையின் வடபகுதியில் சீனாவால் இந்தியாவுக்கு ஏற்பட்ட வயிற்றெரிச்சலுக்கு மருந்து கொடுத்தது போலவும் ஆச்சுது. இனிமேல் இந்திய வெளி உறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர ஐயர் நிம்மதியாகத் தூங்க முடியும். அமெரிக்கத் துணை அதிபர் அம்மா கமலா கரிசும், தன் பாட்டியின் தேசத்துக்கு ஏதோ தம்மாலான நல்லதைச் செய்து விட்ட மனநிலையில் ஆறுதலும் காண முடியும். ஈழத் தமிழரைப் பொறுத்த வரை அவர்களின் பூர்வீகத் தாயகம் நிரந்தர அமெரிக்க அடிமைச் சாசனமாக மாற்றப்பட்டு, இனி உலகில் யாரும் சட்டப்படி உரிமை கொண்டாடும் நிலை அமெரிக்காவின் கைகளில் மட்டும் உள்ளதாக ஆக்கப்பட்டு விட்டது.

"அழுதவர்கள் எல்லாருடைய கவலைகளும் தீர்க்கப்பட்டு விட்டன. மரண சோகத்தில் தவிக்கும் தமிழ் ஈழ மக்களின் கவலைகளுக்கும், கண்ணீருக்கும் யார், எப்போ, என்ன தீர்வைத் தருவார்கள்?" என்கிற திரி சங்கு சொர்க்க நிலைக்கு ஆளாக்கப் பட்டு விட்டது.



*1956*ல் பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டம் இயற்றி பறங்கியர், மலாய், வட இந்தியர், ஆப்கான், பாக்கிஸ்தானிய மக்களை நாட்டை விட்டு ஓடவைத்தார். *1956* தொடக்கம் தமிழ்த் தலைவர்களையும், மக்களையும் தொடர்ச்சியாக வன் முறைக் கலகங்களை நடத்தி, கடைசியாக *2009* முள்ளி வாய்க்கால் தமிழ் இனப் படு கொலைகள், முட்கம்பி முகாம்கள், வெள்ளை வான் கொலைகள், கடத்தல், காணாமல் போக்கடித்தல் எனத் தமிழ் மக்களையும், தமிழர் நிலத்தையும் சிங்கள அரசு அடிமைப்படுத்தி வருகிறது. இப்படித் தமிழர்களை அழிக்கும் திட்டம் நிறைவாகி விட்ட நிலையில், சிங்களத்தின் நவீன இன அழிப்பு திட்டமாக பிற இன மக்களை வேலை வாய்ப்பு ஆசைகளைக் காட்டி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, சிங்களம் பட்ட கடன்களை, ஈடு செய்யப் போவதாக நிதி அமைச்சு திட்டமிட்டு வருவதாகவே எனக்கு இச்செய்திகள் தெரிகின்றன.

*1980*கள் தொடக்கம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக ஆயிரக் கணக்கான வறிய சிங்கள மற்றும் இஸ்லாமியத் தமிழ்ப் பெண்கள் சட்டப்படியாகவும், சட்டங்களை மீறியும் பணிப் பெண்களாகச் சென்ற ஏராளமான பெண்களின் சோகக் கதைகளும், பிரேதமாக மீட்கப் பட்ட செய்திகளும் வந்த வண்ணமே இருந்தன. ஆனாலும் அரசின் கணிசமான வருவாயாக அவர்களின் சம்பளம் நாட்டுக்குள் வருமானமாக வந்த காரணத்தால், அரசு மக்களின் நலன்கள் பற்றிக் கவலைப்படாமல் அந்நிய செலவாணி பற்றியே கவனத்தைச் செலுத்தியது.

இப்படிச் சீரழிந்து, சின்னா பின்னமான பெண்கள் பெரும்பாலும் இஸ்லாமியத் தமிழ்ப் பெண்களே. அவர்கள் மூலம் கடந்த காலங்களில் அந்நியச் செலவாணியாக மிகப் பெரும் தொகையைப் பெற்ற அரசு, இப்போ தனது நெருக்கடியை அதே வழியில் தீர்த்து விடலாம் என நம்புவதையே இந்தச் செய்தி காட்டுகிறது. இத்திட்டத்தில் மிகப் பெரும் தொகையினராக சிங்களவர் அல்லாத மக்களே முன்வருவர். அதே சமயத்தில் இனச் சுத்திகரிப்பை மிகச் சுலபமாகவும், கமுக்கமாகவும் நடத்திவிட அரசுக்கு இத்திட்டம் கைகொடுக்கும்.




# DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் உணவுப்பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**வாடிக்கையாளர் அனைவருக்கும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்**

StaR-Impex



## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

Rabeena We've Mastered Taste
Aachi The Mother of Good Taste
BTM
Double Horse
Bringing Health to Life

பொருட்களை ஜேர்மனியில் மொத்தமாக விநியோகம் செய்யும் ஒரே நிறுவனம்



MDH · Laziza · Cock Brand · DAAWAT The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice
Nestlé · PG tips · Niru Brand · AROY-D · MTR · Aashirvaad · Pillsbury · Patak's Original · Laila

தேவன்

## யாருக்கு நன்மை தரும்

# காத்தான்குடி PRODUCTS





இந்தச் சொல்லாடலின் மறைக் கொடூரத்தை யாராவது தமிழர் தாயகப் பகுதியில் உணர்ந்திருப்பார்களா? தெரியவில்லை. ஆனால், இதே சொல்லாடல் இப்பொழுது ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை என்பதுவாக மருவிவிட்டது. இந்த ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மைக்கான முக்கிய காரணம் புலிகளின் இல்லாமை. அதைவிடவும் ஈழத்தமிழ் சமூகத்தின் முயற்சியற்ற நிகழ்ச்சி நிரலும் பெரும்பங்கு வகிக்கிறது. இந்த முயற்சியற்ற சமூகத்தின் இன்றைய தோற்றுவாய்க்கு இரண்டு அடிப்படைகள் உள்ளன.

வெளிநாட்டுக் காசு அறவிடுவோராகவும், கற்றபின் கவர்ச்சிகர வேலை என்பதுவுமான இரண்டு சமூகங்கள் நம்முன்னே தாயகத்தில் உருவாக்கிவிட்ட பிறகு தற்சார்பு, சுயதொழில், விவசாயம் என்பன அற்றுப்போய், மலிந்ததை அள்ளும் மனப்பான்மையின் மேலோங்கிய தன்மையே, இவ்வாறான காத்தான்குடி ***products*** வெற்றி நடை போடுவதற்கான முக்கிய காரணமாகும்.

“***Powder*** கொத்து ரொட்டி” பற்றிய பேச்சு வந்தபோது, அதை நகைச்சுவையாகவும், எள்ளலாகவும் மேவிச் சென்ற எமது தமிழ்ச் சமூகத்தை விழிப்படையச் செய்யும் வகையில், யாராவது ஏதாவது அறிவுபூர்வமாக எழுதி வெளிக்கொணர்ந்திருக்கிறார்களா என்றால்...?

காத்தான்குடி ***products;*** எமது சமூகத்தில் கண்டறியப்பட ஆரம்பித்த வருடம் ***2010.*** அப்போது இலங்கையின் ***industry and Commerce*** இதற்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் றிஸாட் பதியுதீன் ***(Rishad Bathiudeen)*** அவர்களே, இலங்கையின் சதொச மலிவு விற்பனை அங்காடிகளுக்கும் பொறுப்பாக இருந்தார். வடகிழக்கிற்கு அனுப்பப்பட்ட சதொச சீனி மூட்டையில் யூரியா கலந்திருந்தது, வவுனியாவில் வைத்துக் கண்டுபிடிக்கப்பட்டு, சர்ச்சையாக அது உருவெடுத்தபோது, யூரியா மூட்டைக்குப் பக்கத்திலேயே சீனி மூட்டை இருந்ததால், அதை யாரோ வாடிக்கையாளர் மாறி வாங்கிச் சென்று விட்டார் என்று கூறி, அதை அப்படியே மலினப்படுத்தி விட்டார்கள். சதொச வில் உர வகைகள் அப்போது விற்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த றிசாட் பதியுதீன் ஊடாகவே, மலினச்



சந்தைகளில் வேகமாக காத்தான்குடி ***products*** உள்நுழைந்தன.

இலங்கையின் பிரபலமான ***Lemonpuff biscuits*** மற்றும் ***"Manchi biscuits"*** ஆகியனவ கூட இப்பொழுது முற்றுமுழுதாக "காத்தான்குடி ***products***" ஆகிவிட்டது. சாதாரண ***lemon puff*** சுவையை நன்கு அறிந்தவர்கள், இதற்கான வித்தியாசத்தை அறிந்து கொள்வதாகச் சொல்லப்படுகிறது. காத்தான்குடி ***Lemonpuff*** இன் சுவையானது, சிறுவர்கள் விரும்பி உண்ணும் உப்புச்செழுமையான ***TipiTip*** போலவே முதலில் நாவில் உணரப்படுகிறதாம். ***Manchi biscuits*** இன் சுவையிலும் பாரிய மாறுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுபற்றி வாடிக்கையாளர் முறையீடு செய்யமுடியாதா? என வினவினால், முறையிடும் அலுவலகங்களில் அதற்குரிய ஆதாரம் கேட்கிறார்களாம். அச்சில் அப்படியே நகலாக இருக்கும் வெளிப்புற உறைகளின் அமைப்புக் காரணமாக எந்த ஆதாரங்களையும் சமர்ப்பிக்க முடியாதிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த மாறுபாட்டு சுவையின் மூலம், உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் எவ்வாறான பொருட்கள் உள்ளடக்கப் பட்டிருக்கிறது என்பதனையும் ஆராய்ந்தறிய இயலவில்லை.

குழைமக் குழாய்களில் அடைக்கப்பட்ட குளிகைகளும் ***(Tube capsules)*** இப்போது "காத்தான்குடி ***products***" இல் வெளிவருகின்றன. இதற்காக காத்தான்குடி தொழில் முனைவோர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அசாதாரணமானவை. இலங்கையின் தேசிய வைத்திய சாலைகளில் பணிபுரியும் முஸ்லீம் வைத்தியர்கள் / தாதிகள் ஊடாக, காலாவதியான குளிகைகளைத் தொகையாகப் பெற்று எடுத்துச் சென்று, அரைத்துத் தூளாக்கி அவற்றை குழைமக் குழாய்களில் அடைத்து, மலிவு விலையுடன் சந்தைகளில் சர்வசாதாரணமாக உலவ விடுகிறார்கள். குளிகைகளில் அச்சிடப்பட்டிருக்கும் காலாவதித் திகதிக்கு முன்பாகவே, குளிகையை உட்கொண்டவர் காலாவதியாகி விடவும் வாய்ப்புண்டு.

இலங்கை முழுவதும் பிரபலமான ***DSI bata*** எனும் காலணி நிறுவனம், செக்கோசிலோவாக்கியா நாட்டில் *1894* இல் உருவாக்கப்பட்டது. ஆசிய நாடுகளுக்கான இதன் தலைமையகம் இப்போது சிங்கப்பூரில் இருக்கிறது. சாதாரணமாக தினமும் நடந்து



வெளியிடங்களுக்குச் செல்பவரென்றால் கூட, ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்கு ***Bata*** காலணியை உபயோகிக்க இயலும். ஆனால் இப்போதெல்லாம் இலங்கையின் ***Bata*** வேகமாக தேய்வுறுகிறது அல்லது அறுந்து போகிறது என்றால் அது நிச்சயமாக "காத்தான்குடி ***Products***" அன்றி வேறில்லை.

கணினி மூலமாகச் சேமிக்கப்படும் தரவுகளுக்கான சேமிப்பிடமான ***pendrive*** கூட இப்பொழுது காத்தான்குடி ***products*** ஆக இருக்கிறது. சாதாரண கைத்தொலைபேசியின் தரவுச்சேமிப்பிற்காக உபயோகிக்கும் ***Memory card*** எங்கேயாவது மலிவுவிலைக்கு வாங்கி, அதனை வடிவமைத்துவிட்டு, அதன்மேலே விலையுயர்ந்த ***pendrive*** தயாரிப்பு நிறுவனங்களின் பெயரை அச்சடித்து விட்டால், மலிவென்றால் வாங்கும் தமிழ்ச் சமூகம் விட்டுவிடப்போகிறதா என்ன..?

தமது முகத்தை வெளிறச் செய்ய, பெண்கள் பூசுகின்ற ***Fair and Lovely*** யும் "காத்தான்குடி ***products***" இல் வெளிவருகிறது. இன்னும் என்னென்னென அழகுசாதனப் பொருட்கள் அங்கிருந்து வெளிவருகின்றன என்பதை அறிய இயலவில்லை. இந்தத் தயாரிப்புகளைக் குடிசைக் கைத்தொழிலாகச் செய்கின்ற முஸ்லீம் பெண்கள் குழுமம், காத்தான்குடியில் இயங்குவதாகச் சொல்கிறார்கள். இதுபற்றி நுகர்வோர் அமையத்திலோ அன்று காவல்துறையிடமோ முறையிட இயலாதா? என்று கேட்டேன். குண்டு வைச்சிருந்த சஹ்ரான் குழுவிற்கே நடவடிக்கை எடுக்காத இலங்கை அரசாங்கம், இதற்காகவா நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று சொல்லிக் கலாய்க்கிறார்கள்.

இவற்றை விடவும், குழந்தைகளுக்கான உணவுகள், பெட்டிகளில் அடைத்த பால், குளிர்கழி, புத்தகப் பைகள், பாடசாலை உபகரணங்கள், காலணிகள் அனைத்துமே காத்தான்குடி ***products*** ஆக மாறி இலங்கை முழுவதிலுமுள்ள சந்தைகளில் பரவிவிட்டன. வடக்கு கிழக்கில் "வறிய மாணவர்களுக்கு உதவுகிறோம்" என்று படம் போடும் "புலம்பெயர்ந்த தாராளாப் பிரபுக்கள்" தமிழர் கடைகளில் வாங்குவதை விரும்புவதில்லை. எங்கே குறைந்த விலையில் புத்தகப் பை வாங்கலாம் என்று கேட்டு, உடனே; ***Vavunyiya Bazaar Street*** இல் உள்ள முஸ்லீம்



கடைகளைத்தான் பெருமையோடு அடையாளம் காட்டுவார்கள். நம்மவர்களின் பரம்பரைக் குணமான "மலிவாய் இருக்கப்பா" மனோநிலையே காத்தான்குடி ***products*** இன் வெற்றிச் சரித்திரம்.

இப்படியே போனால்; ஒடியலும், பனங்கள்ளும் கூட வெகுவிரைவில் காத்தான்குடி ***product*** ஆக வெளிவரும். காத்தான்குடி தயாரிப்புகளில் என்னென்ன வேதிப்பொருட்கள் கரைந்திருக்கின்றன என்பதை அறிவார் யாருமிலர். தமிழீழத்தின் பொருண்மிய மேம்பாட்டுக் கழக நூல்களை இணையங்களில் பரப்பும் நம்மவர், தற்சார்பு பற்றிய எவ்வித நோக்கமும் இன்றி அலைந்துத் திரிவதையே காண்கிறோம். இன்றுள்ள இளம் சமுதாயத்தை பழக்கப்பட்ட மனோநிலையிலிருந்து வெளிக்கொணர்ந்து, எமது மண்ணின் வளங்களைக் கொண்டு எமது தேவைகளை நிறைவு செய்யும் பழக்கத்தை யார் உருவாக்குவார்கள்?

பதிவுசெய்யப்படாத குடிசை கைத்தொழிலூடாக, வேகமாக சந்தைகளை ஆக்கிரமிக்கும் காத்தான்குடி ***products*** மூலம் சிங்களவனையும் விஞ்சி நிற்கும் இனமாக, இலங்கை முஸ்லிம்கள் வெகுவிரைவில் மாறுவார்கள். சிங்களவர்களுக்கு அந்தச் செய்தி வெகுவிரைவில் சொல்லப்படும். மேலே உள்ள தகவல்களை அளாவியபடி, என்னய்யா உப்பிடியெல்லாம் நடக்குதே என்று கேட்டேன். "எங்கயோ பிழை விட்டுட்டம் அண்ணை" என்று முடித்துக் கொண்டார்.

உண்மைதான்; அன்று முஸ்லிம்களையும் தமிழராக மதித்த புலிகளின் பரிதாபத் தவறுதான், இன்று நாம் அனுபவிக்கும் விளைவுகளின் அடிப்படையாகும்.

# Tilda




11-10-2021 இருந்து 15-02- 2022 வரை

# 50 000€

## ஜம்பதாயிரம் ஈரோக்கள் பெறுமதியான பயணப் பரிசுகள் வெற்றி பெறுவதற்கான போட்டிகள் !

## பரிசுகளை வெல்லுங்கள்



**5000€**
பெறுமதியான
5 பயணங்கள்
மற்றும்

**500€**
பெறுமதியான
50 விமானச்
சீட்டுகளை
வென்றுகொள்ள
முனையுங்கள் !




## எவ்வாறு போட்டியிடுவது ?




1.பரிசு கூப்பன் ஒட்டிய Tilda பாஸ்மதி அரிசி பை வாங்க வேண்டும் !

2. QR குறியீட்டை "ஸ்கேன்" செய்யுங்கள் !



3.பதிவு செய்யுங்கள் !



4.வெற்றி பெற்றீர்களா என்பதை உடனே தெரிந்துகொள்ளுங்கள்!

Prize Draw, subject to purchase of Tilda products, organized by Tilda Ltd, from 11/10/21 to 15/02/22 for consumers over 18 years old living in France, Germany or Netherlands. Terms and conditions on www.tildapromotion.com

கல்லெறி வேலுப்பிள்ளை

# “என்ன கொடுமை சரவணா!”



## வணக்கம் பாருங்கோ,
## எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**இன்னொரு புதுவருசமும் வந்திட்டுது பாருங்கோ. நடத்தையும் குணமும் மாறாமல் புதுவருடங்கள் வருவது வெறும் பொழுதுபோக்காக இருக்குமே தவிர அடிப்படையில எதுவும் மாறாப்போறதில்லை பாருங்கோ. ஒவ்வொரு வருசமும் ஆரம்பத்தில எல்லாரும் உறுதி எடுக்கிறது வழமைதான் பாருங்கோ.**



ஆனால் வருடம் முழுக்க அதைக் கடைப்பிடிக்கிறது யாரெண்டு தேடினால் மிஞ்சுறது ஏதோ கொஞ்சம் தான் பாருங்கோ. அதனாலேயே நான் எதுக்காகவும் உறுதி எடுக்கிறேல்லை. எடுத்துப்போட்டு காத்தில விடுறதைவிட, எடுக்காமலே இருக்கிறது நல்லம் தானே பாருங்கோ. எங்கட ஆக்கள் விடுற உறுதிமொழிகளை சனம் மறந்திரும் எண்டு நினைக்கிற பருப்பாளர்கள் இருக்கினம். ஆட்சியாளர்கள் இருக்கினம், அமைச்சர்கள் இருக்கினம். ஆனால் உதில எத்தினை பேர் உறுதிமொழிகளை கடைப்பிடிக்கினம் எண்டு நீங்களே யோசிச்சுப்பாருங்கோ.

விசயம் என்னெண்டா பாருங்கோ, தமிழன் வாழுற இடமெல்லாம் தங்களுடைய வழிபாட்டு முறைகளைப் பரப்புறது வழமை தானே. அதிலையும் இந்து மதத்தை பின்பற்றுற ஆக்கள் கண்ட இடமெல்லாம் கோயில் கட்டுறது வழமைதானே. அப்பிடித்தான் இஞ்சயும் ஒரு இடத்தில கோயில் கட்டுறது எண்டு சொல்லிப்போட்டு, ஆக்களிட்ட காசை வாங்கி மண்டபம் கட்டினவை. மண்டபம் ஏன் எண்டு கேட்டால், மண்டப வருமானத்தில கோயிலைப் பெருப்பிக்கலாம் எண்டு சொன்னவையாம். அதுவும் காசு குடுத்த ஆட்களை வெளியில வலுக்கட்டாயக்கமாக அனுப்பிப்போட்டு, தங்களுக்கு ஏற்ற மாதிரி நிர்வாகத்தைத் தெரிஞ்சுபோட்டு கூத்தாடுகினம் பாருங்கோ. என்னுடைய நண்பர் ஒருத்தர் உந்த

நிர்வாகத்துக்குள்ள இருந்தவர் கண்டியளோ. அவர் துடிச்சுப் பதைச்சு வெளியில வந்து சொன்ன விடயங்கள் கேட்டு எனக்கும் தொண்டை அடைச்சுப்போச்சு பாருங்கோ.

ஏற்கனவே உந்தக்கோயில் பிரச்சனை எனக்கு வந்தது பாருங்கோ. ஆனால் ஏதோ நிர்வாகத்துக்குள்ள அடிபாடு தானே, கெதியில முடிச்சிரும் எண்டு நினைச்சன் பாருங்கோ. ஆனால் விசயம் இதுக்குள்ள வேற மாதிரி போகுதெண்டு இப்பதான் தெரியும் பாருங்கோ. என்னெண்டா பாருங்கோ கோயிலும் அதோட சேர்த்து மண்டபமும் சேர்த்துக் கட்டப்போறம் எண்டுதான் நிதி சேர்த்தவை. நிதி திரட்டின பிறகு கோயிலை ஆகம விதிமுறைகளுக்கு முரணாகவும், மண்டபத்தைப் பெரிசாகவும் கட்டப்போற கூத்துத் தெரியவந்தது கண்டியளோ. அதுக்குள்ள நிண்டு நியாயத்தைத் தட்டிக்கேட்ட பெடியளை வலுக்கட்டாயக்கமாக வெளியில அனுப்பிப்போட்டு, தன்ர கூத்தை ஆடத் தொடங்கினார் பாருங்கோ. அந்த நேரமே எனக்கு நட்பு ஒருத்தர் சொன்ன விசயங்களை நான் அகரத்தில எழுதினனான் பாருங்கோ.

ஆனால் இப்ப பார்த்தால் விசயம் வேறமாதிரி போகுது கண்டியளோ. கோயிலுக்குள்ளே நடந்த நிர்வாகத் தவறுகளைத் தட்டிக்கேட்ட யாரும் கோயிலுக்குள்ளே வரமுடியாத மாதிரி காவல்துறை ஊடாகத் தடை உத்தரவு போடப்பட்டிருக்கு கண்டியளோ. இது தெரியாமல் கோயிலுக்குள்ளே போன வயது முதிர்ந்த ஒருத்தரை வலுக்கட்டாயக்கமாக வெளியில அனுப்பியிருக்கிறார் கோயில் காசைச் சுருட்டின முதலாளி. அவர் தான் சுருட்டுறதுக்கு ஏதுவாக தன்னுடைய உறவினர்களைத் தான் இப்ப நிர்வாகத்துக்குள்ள நியமிச்சிருக்கிறார் பாருங்கோ.

அதனால அந்தக்கோயிலை இனி அம்மன் கோயில் எண்டு சொல்லுறேல்லை எண்டு சனம் முடிவெடுத்திருக்குதாம். கள்ளர் கோயில் எண்டுதானாம் இனி அந்தக்கோயிலுக்கு பெயர் பாருங்கோ. ஏனெண்டால் கோயில் ஐயருக்கும் சகல விடயங்களும் தெரிந்தும் அமைதியா இருக்கிறாராம் பாருங்கோ. ஏனெண்டால் நியாயத்தை விட அவருக்கு காசு




முக்கியம் கண்டியளோ. அவருக்கும் பசிக்கும்தானே. அதனால அவர் கள்ளர் கோயிலின்ர நிர்வாகத்துக்கு கைகட்டி சேவகம் செய்யப் போறார் பாருங்கோ. ஐயா கொஞ்சம் நியாயமானவர் எண்டு நினைச்சிருந்த பெடியளுக்கு இப்ப அதிர்ச்சி மேல் அதிர்ச்சி பாருங்கோ.

கோயில் கட்டுறதுக்கு சனம் குடுத்த காசுல கோயிலைச் சரியாகக் கட்டாமல், மண்டபம் கட்டி அதில வாற காசில பிழைப்பு நடத்தத் திட்டம் போடுற இந்தக்கூட்டம் இப்ப கிட்டடியில மக்களின்ர அனுமதியில்லாமல் மண்டபத்தை அடாத்தாகத் திறந்து வைச்சிருக்கினம் பாருங்கோ. இந்தக் கோயிலுக்காக இதுவரை உழைச்ச யாரும் இப்ப அந்த நிர்வாகத்துக்குள்ள இல்லை கண்டியளோ. மச்சான் கணக்காளர், மாமன் நிர்வாகம், எண்ட கணக்கில போய் இப்ப அது குடும்பத் திருட்டுக் கோயிலாகீட்டுது பாருங்கோ. இந்தத் திருட்டுகள் தொடர்பாக கதைச்சவர்கள் அனைவரையும் இப்ப கோயிலுக்குள்ள கும்பிடக்கூட அனுமதி குடுக்கிறதில்லையாம் எண்டா பாருங்கோவன்.

இதுக்குள்ள வேற ஒரு கூத்தும் நடந்திருக்கு கண்டியளோ. கோயிலுக்குள்ளே இருந்து திருட்டுக்கூட்டத்தால வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட கொஞ்சப் பேருக்கு சட்டவாளரை ஒழுங்குபடுத்தி நியாயம் வாங்கித்தாறன் எண்டு கூட்டிப்போய் ஒருத்தன் ஏமாத்திப் போட்டான் பாருங்கோ. இப்ப அவன் காசையும் தாறானில்லையாம், சட்டவாளரிட்ட சந்திக்கக் கூட்டிப்போறானும் இல்லையாம். மரத்தால விழுந்தவனை மாடேறி மிதிச்ச கதைதான் பாருங்கோ. மன அமைதிக்காக கோயிலை நாடிப்போற மக்களுக்கு எத்தினை சோதனையள் பாத்தியளே?

இதையெல்லாம் இந்தநாட்டுக்காரன் பார்த்தால் என்ன நினைப்பான் கண்டியளோ. அகதிகளாக வந்ததுகளுக்கு இருக்க இடமும் குடுத்து, வேலையும்குடுத்து கோயில் கட்ட இடமும் குடுத்தால் இதுகள் அநியாயமும் அடாத்தும் பண்ணி கூட இருக்கிறதுகளையே கொல்லப்பாக்குதுகள் எண்டு நினைப்பானோ இல்லையோ. கடவுளை அடையும் வழி அன்பும் அறமும் தான் பாருங்கோ. ஆனால் எங்கடையளுக்கு வம்பும் புறமும் தான் கடவுளை அடையும் வழி எண்டு சொல்லப்பட்டிருக்குப் போல கிடக்கு. கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க குடியிருக்க வேண்டா எண்டு ஔவை சொன்ன காலம் போய், கோயில் உள்ள ஊரில் குடியிருக்க வேண்டா எண்ட காலம் வரப்போகுது பாருங்கோ.

திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. புதுவருசத்தில அதிகமாகக் கதைக்க விரும்பேல்லை பாருங்கோ.

**"ஆசை, கோபம், களவு கொள்பவன்**
**பேசத் தெரிந்த மிருகம்**
**அன்பு, நன்றி, கருணை கொண்டவன்**
**மனித வடிவில் தெய்வம் - இதில்**
**மிருகம் என்பது கள்ள மனம் - உயர்**
**தெய்வம் என்பது பிள்ளை மனம் - இந்த**
**ஆறு கட்டளை அறிந்த மனது**
**ஆண்டவன் வாழும் வெள்ளை மனம்.."**

**- அப்ப வரட்டே**






வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
20ஆம் ஆண்டில்....
மாபெரும்
ராஜ
முத்திரை
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648
வாடிக்கையாளர் அனைவருக்கும்
தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்

அன்புச் செல்வன்

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

இந்த வரை படம் கிரேக்க வரைபட வித்தகர் தொலமியால் வரையப் பட்டதாகச் சொல்லப் படுகிறது. ஆனால், அதற்கான வலுவான ஆதாரங்கள் இல்லாமலும், இலங்கையை விட மிகப் பெரும் கண்டமாகக் காணப்படுவதாலும் நீண்ட காலம் சர்வதேச விவாதப் பொருளாக இருக்கிறது. இருப்பினும் குமரிக் கண்டம் தமிழரின் பூர்வகத் தாயகம் என்பதை அறிவியல் உலகம் ஏற்றுக் கொண்டு விட்டது. பேரின வாத அடக்கு முறைகளைக் கடைப் பிடிக்கும் இலங்கை இந்திய அரசுகள், கடல் ஆய்வுகளைத் தடைசெய்துள்ள நிலையில், நிறைவான ஆய்வுகள் செய்யப் படாமலே உண்மைகள் முடங்கி உள்ளன. முழுமையான ஆட்சி அதிகாரம் தமிழரிடம் வரும் வரை உண்மைகளுக்கானப் போராட்டம் தொடர வேண்டும்.

சுமந்திரனும், சாணக்கியனும் உலகமெல்லாம் ஓடித் திரிந்து, தமிழ் மக்களின் தாயக மீட்பைத் தடைசெய்யும் அரசியலை இலங்கை இந்திய அரசுகளுக்கு ஆதரவாகச் செய்து வரும் நிலையில், பெரு மதிப்புக்குரிய முன்னாள் நீதி அரசர் விக்கினேஸ்வரன் மட்டும் காரமும், சாரமும் குறையாமல் தமிழ் இனத்தின் தொன்மையைப் பறை சாற்றுவதில் தீவிரம் காட்டி வருகிறார். அதனால் சிங்கள அறிவுசார் மக்களிடையே விவாதப் பரப்பில் பேசுப் பொருளாக மாறி வருகிறார்.




**இது தமிழரின் கடல் விழுங்கிய தாயகமான குமரிக் கண்டத்தின் வரைபடமா?**

தமிழ் இலக்கியங்களில் குமரிக்கண்டத்தில் 7 பனை நாடு, 7 தெங்கு நாடு, 7முன் பாலை நாடு, 7 பின்பொலை நாடுகள் என 49 தமிழரின் நாடுகள் இருந்துள்ளதாகப் பல பழந்தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அவற்றுள், தமிழகத்தின் தொல்காப்பியத்தில் பனம் பரனார் பாடிச் சென்ற, “பாயிரத்தில் குறிப்பிட்ட வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல் உலகம்” எனப் பட்ட ஏழ் ஏழு நாடுகளைக் கொண்ட மாபெரும் குமரிக் கண்டம் கடற்கோளால் மூழ்கிய பின்னர், எஞ்சிய நிலப்பரப்பாகிய ஏழ் பனை நாடே இன்றைய இலங்கை எனத் தமிழ் மரபுகளும், இக்காலத்து நிலவியல் ஆய்வுகளும் தெரிவிகின்றன.

ஆனால், இன்றைய ஆரிய சிங்கள பௌத்த இன மத வெறிச் சிந்தனையாளர்கள் தமிழரின் தாயகக் கோட்பாட்டை மறுக்கவும், சிங்கள இன மேலாதிக்க

கோட்பாட்டை வலியுறுத்தவும், இலங்கையில் தமிழர்கள் ராஜராஜ சோழனின் படையெடுப்பின் பின்னால் குடியேறிய தமிழகத் தமிழர்களின் வழித் தோன்றல் எனப் பிரச்சாரப் படுத்தி வருகின்றனர். இதனைப் பிராந்திய, அரசியல் வர்த்தக இராணுவ கேந்திர, வர்த்தகத் தேவைகள் கருதி உலகின் பலமிக்க நாடுகள் நடத்திய தமிழ் இன அழிப்புப் போர் 2009ல் முடிவுற்ற பின்னரும், தமிழரின் தாயக மண் மீட்புப் போரைத் தொடர வேண்டிய கட்டாயத்தில் ஈழத் தமிழர்கள் உள்ளனர்.

அத்தகைய கட்டாயத்தை இலங்கையின் சிங்கள அரசு, நாடு விடுதலை பெற்ற 1947ஆம் ஆண்டு தொடக்கம், தமிழர்கள் மீது சிங்களப் பேரினவாத அரசுகள் எதிரான சட்டங்களை இயற்றி, அரச படைகளின் பயங்கரவாத்தைத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டன. அவற்றை எதிர்த்துத் தமிழர்கள் அமைதி வழிகளில் நடத்திய அரசியல் போராட்டத்தைப் பயங்கர வாதமாகப் பிரச்சாரப்படுத்தி, தமிழ் மக்கள் மீதான அரச படைகளின் பயங்கரவாதத்தை நியாயப் படுத்தின.

அதன் எதிர் வினையால் உருவான தமிழரின் ஆயதக் கிளர்ச்சியை, அகில உலகப் பயங்கர வாதத்துக்கு எதிராக மடை மாற்ற டக்லஸ் தேவானந்தா, சுரேஸ் பிரேமச் சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான விடுதலைப் போராட்டக் குழுக்களையும், நீலன் திருச் செல்வம், லக்ஸ்மன் கதிர்காமர், இரா.சம்பந்தன் போன்ற தமிழ் இன விரோதிகளையும் பணம், பதவி, பயம் காட்டியும் தமிழனத்தின் தாயக விடுதலைப் போராட்டத்தைச் சிங்கள அரசு அழித்தது.

அத்தோடு சிங்களம் தனது தமிழர் மீதான போரை நிறுத்தி விட வில்லை. தமிழரின் நிலங்களைப் பறித்தும், கலாச்சார தனழத்துவங்களை அழித்து, தமிழர்களின் கோயில்களில் புத்தரின் சிகைளையும், அவற்றை நடத்த புத்த பிக்குகளின் வேடமிட்ட காடையரையும் குடியமர்த்தி, பாரம்பரிய குடிப் பரம்பலையும் சிதைத்து வருகின்றது. இன்று அந்த வரிசையில் இலங்கை அரசு, தனக்கு ஆதரவாக மரிய நாயகம், ஆபிரகாம் சுமந்திரன், மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோரைக் களம் இறக்கித் தமிழினத் துரோக அரசியலைக் கையில் எடுத்து, உலகில் தமிழரின் ஏக





ரவிராஜ்

அரசியல் தலைவலர்களாக வலம் வர வைக்கப் பட்டிருக்கிறார்கள். அதே சமயம் பாராளுமன்றத்துக்கு முதல் முறையாகத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக தெரிவாகி வந்த முன்னாள் நீதியரசர் திரு.க.வி.விக்கினேஸ்வரன் அவர்களின் பேச்சும், செயல்களும் சிங்கள இனவாத அரசியல் தலைவர்களின் வயிற்றில் புளியைக் கொட்டி எரிச்சலில் அலற வைத்து வருகிறார்.

அவர் தம்முடைய கன்னிப் பேச்சில் இருந்தே தமது வடமாகாண முதலமைச்சர் பதவியின் பொழுது சிங்கள அரசின் கெடு பிடிகளையும், அழுத்தங்களையும் வடமாகாண மக்கள் மீது அரசு செயற்படுத்தும் திட்டங்களால் மக்கள் படும் துயரங்களையும் விலாவாரியாகத் தமது உரை மூலம் சம்மட்டியால் அடித்துத் துவம்சம் செய்தவர். இது காலம் வரை செல்வநாயகம், அமிர்தலிங்கம், சம்பந்தன் போன்றவர்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் கத்தி விட்டு தமிழ் மக்களை ஏமாற்றி நடத்திய அரசியலைச் செய்யாமல் சிங்களவருக்குச் சிங்களவரிடையே சிங்களத்தில் ஒரு தேசம் இரு நாடுகள்தான் தமிழருக்கானத் தீர்வும் தேவையும் பேசி வருபவர்.

இதே முறையில் சிங்களத்தில் தமிழரின் அரசியல் பிரச்சினையைச் சிங்கள மக்களிடையே பேசி, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்திய ரவிராஜை சிங்களத் தொலைக் காட்சியில் பேசி விட்டு, வீடு திரும்புகையில் நடு வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப் பட்டார். இக்கொலை பற்றி அவர் தெரிவான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையோ அல்லது அக்கட்சி தலைமை தாங்கிய தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர் சம்பந்தனோ கடைசி வரை கவலைப் படவே இல்லை. அவர்களின் கவலை எல்லாம் மக்களால் புறக்கணிக்கப்பட்டு வரும் தமிழரசுக் கட்சி இப்படியான கொலைகளால் ஏற்படும் இழப்புகளை ஈடு செய்யும் பொழுது, தனது கட்சியை வலுப்படுத்துவது அதன் வாடிக்கையாகக் கொண்டுள்ளது.

இவை போன்ற பல முரண்பாடுகளால் அரசியலுக்கு இழுத்து வந்த சம்பந்தனின் சொற்களை மீறி, தமிழ் மக்களின் அரசியலை தமது தார்மீகக் கடமையாக ஏற்றுச் செயற்பட்டு வருகிறார் ஐயா விக்கினேஸ்வரன். அவருடைய இத்தகைய இறுக்கமான ஈடுபாட்டுக்குக் காரணம், இலங்கை வரலாற்றில் மிக உன்னதமான இடத்தை வகித்த சேர் பொன் இராமநாதன் இவரது பேரனின் ஒன்று விட்ட சகோதரன். அதனால் அன்று அவர் தவறவிட்ட அரசியல் சாதனையை இன்று, தன்னால் முடிந்தவரை ஈடு செய்ய வேண்டும் என்கிற அவா இவருள் எழுவது இயல்பே!.

கண்டி மகாநாயக்க தேரரிடம் சமஷ்டி கட்சி பற்றியும் பேசிப் பார்த்து விட்டார். இப்பொழுது பாராளுமன்றத்திலும், பொது ஊடகங்களிலும் தமது அரசியல் கொள்கையை 6வது திருத்தச் சட்டத்தை மீறாத வகையில், தமிழருக்கான அரசியல் தீர்வைப் பேசி வருகிறார். இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தை மீறாமலும், சர்வதேச அரசியல் நடைமுறைகளுக்கு அமைவாகவும் அவர் பேசி வருவதால் சிங்களம் பதறி அழுகிறது.

*அவருடைய அரசியல் மனமாற்றத்தை 24.10.2818ல் காரை நகர், கசூரினா கடற் கரையில் நடந்த கூட்டத்தில் அவர் பேசிய இந்த வரிகள், அவரது இன்றை அரசியலை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துவதைக் காணலாம்.*

**“நான் கடந்த ஐந்து வருடங்களாக வட பகுதியின் முதலமைச்சராகப் பணிபுரிந்து வருவது பலருக்கு இடைஞ்சல்களைக் கொடுத்திருப்பதை உணர்கின்றேன். ஒவ்வொருவரும் தாம் தாம் நினைத்தவாறு செயற்படுவதற்கும், நேர் வழியற்ற வகையில் சிந்தனைகளை நடைமுறைப் படுத்துவதற்கும் எனது இருப்பு மிக இடைஞ்சல்களைக் கொடுத்திருப்பதாக நான் உணர்கின்றேன்.**

**வடமாகாண சபையின் பதவிக் காலம் இன்றுடன் நிறைவு பெறுவதால், இனி நினைத்தபடி செயலாற்ற முடியும் எனத் தயவுசெய்து ஒருவரும் எண்ண வேண்டாம். எமது பதவி நிறைவுறுத்தப் பட்டாலும், தமிழர்களின் விடயங்களில் நாம் எப்போதும் கண்ணும் கருத்துமாக இருப்போம் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.”**

*அவரது இந்த உரையை உறுதி செய்வதைப் போன்ற நிகழ்வாக, அவரது கட்டுரை கொழும்பு ரெலிகிராஃப்*







இணைய தளத்தில் இப்படித் தொடங்குகிறது. "யாரோ ஒருவர் பின் வருமாறு என்னிடம் ஒரு கேள்வியைக் கேட்டுள்ளார்;-

**கேள்வி -** 'அண்மையில் ஊடகங்களில் ஒரு கேள்விக்கு உங்களின் பதிலைப் படித்திருந்தோம். நீங்கள் சிங்களவரைப் பற்றி தடாலடியான விளக்கங்களைச் செய்வதாகத் தெரிகிறது. எங்களுக்குத் தெரிந்த வரையில் சிங்களவர்கள்தான் இந்தத் தீவின் பூர்வக் குடிகள். தமிழர்கள் சோழர்களின் படையெடுப்பின் பின்னர் கி.பி 10ஆம் நூற்றாண்டில் வந்தவர்கள் என்பதே! உங்களின் பேச்சுக்களுக்கு உங்களிடம் என்ன ஆதாரம் சொல்ல இருக்கிறது?

இது ஒரு சாமானிய சிங்களவரின் எளிமையான கேள்வி. ஆனால் அவர் வழங்கிய பதில் ஒட்டு மொத்தச் சிங்கள இனத்துக்கே செவிப் பறைகளையும் கிழித்துக் கொண்டு மனச்சாட்சியையும், மனித மாண்பையும் மதித்து நடக்க வேண்டிய உணர்வைத் தூண்ட வல்லது.

**பதில் -** ஏனைய பல சிங்கள கல்வி மான்களைப் போன்றே இலண்டனில் இருந்து பேராசிரியர் விஜேயநாயக்க நவம்பர் 17ந்திகதி 1996 'சண் டே ஒப்சேவரில்' பின் வருமாறு எழுதி உள்ளார்:-

"இலங்கையில் உள்ள சிங்கள இன மக்களின் மூலம் இலங்கையில் உள்ளது. இந்தியாவில் சிங்கள மொழி பேசுவோர்தோன்றியதற்கான அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் இல்லை."

சிங்கள மொழி பேசுவோர்களே சிங்களவர்கள். உண்மையாகவே இப்பொழுது புலம் பெயர் தேசங்களில் உள்ள தமது தாய் மொழியை மறந்த சிங்களவர்கள், அவர்களின் நாடுகளில் ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால் தொடக்க காலத்தில் சிங்கள மொழியை முதன்மையாகக் கொண்டவர்கள் சிங்களவர்களாக இருந்திருப்பார்கள். சிங்கள மொழி இல்லாமல் சிங்களவர்கள் இருந்திருக்க முடியாது.




Opening hours : Mon-Sat 10.00am - 20.00pm
https//www.facebook.com/sari1fashionhouse

## தமிழர்கள்தான்ஆதிக்குடிகள்

தமிழர்கள்தான் இலங்கையின்ஆதிக் குடிகள். இப்பொழுது இருக்கின்ற அகழாய்வுகளின் அடிப்படையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில்1,25,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தத் தீவில் மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணை மடுவிலும், தென் இலங்கையில் சில இடங்களிலும் நடத்தப்பட்ட அகழாய்வில் கிடைத்த ஆதாரங்களின்படி எங்களுக்குத் தெரியவந்துள்ளது. கலாநிதி சிரான் தெரணியகல தமது ஆய்வுகளின் மூலமாக இவற்றை வெளிப்படுத்தி உள்ளார்.

சிங்கள மொழி என்று கி.பி. 9ல் தொடங்கியது. காலத்தால் மிக முந்திய சிங்கள மொழியில் உள்ள நூல் 'சியபஸ்லகார' என்கிற நூல் கி.பி 848(கி.பி.9ல்), அடுத்து 'கி.பி 918 (கி.பி.10ல்) தம்பிய அத்துவ' என்கிற ஆக்கங்கள் உள்ளன. பிந்தைய ஆக்கத்தில் சுத்தமான பாளி மொழிச் சொற்கள் அதிக அளவில் உள்ளன. சிங்கள சங்கிரகய என்கிற முதல் சிங்கள இலக்கண நூல் கி.பி 13 ஐச் சேர்ந்தது. கி.பி.7ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் உள்ள பதிவுகளில் சிங்களம் ஒரு மொழியாகவோ, மக்கள் இனமாகவோ குறிப்பிடப் படவில்லை. "சிகல" என்னும் சொல் (பாளியில் சிங்கம்) கி.பி.5ஆம் நூற்றாண்டில் முதல் முறையாக தீப வம்சத்தில் இடம்பெற்றுள்ளது. ஒரு முறைதான் இச்சொல் இத்தீவில் சிங்கங்கள் இருப்பதைச் சொல்லக் குறிக்க வருகிறது.

மகா வம்சத்தில் சிகல என்கிற சொல், இரண்டு முறை காணப்படுகிறது. ஆனால் மக்களையோ, மொழியையோ அழைப்பதாக எந்தப் பதிவும்இல்லை. சிங்களத்தில் மக்கள் வரலாற்றிலும் வரலாற்றியலிலும் "சிங்கள அடையாளமும், வரலாற்றில் தத்துவமும்" என்கிற இலங்கையின் மானுடம் என்கிற வெளியீடு பாகம் 5-1-2 (1979) கி.பி.12ம் நூற்றாண்டுக்கு முன்னர் சிங்கள என்கிற அடையாளம் எல்லா மக்களையும் குறிக்காமல், ஒரு சிறிய


அகரம்


விளம்பரத் தொடர்புகளுக்கு


00 49 176 47 11 87 11


ஆளும் வகுப்பினரையேக் குறித்தாக ஆர்.ஏ.எல்.ஏச்.குணவர்த்தனா தமது நூலில்கூறி உள்ளார்.

இதன் பிரகாரம் கி.பி.12ம் நூற்றாண்டுக்கு முன்னர் சிங்கள மொழி முழுமையான மக்களின் நிலையை அடையவில்லை என்பது தெளிவாகிறது. உங்களின் வினாவின் பிரகாரம் 1970க்கு முன்னர் உருவாக்கப்பட்ட பொய்களை நீங்கள் நம்ப வைக்க ஊட்டப்பட்டவை.

விஜயனின் இலங்கை வருகை திட்டமிட்ட பொய்யானக் கட்டுக் கதை. 1970க்குப் பின்னர் சிங்கள வரலாற்று





ஆசிரியர்களே வட இந்தியாவில் இருந்து வந்த விஜயன் கதையுடன் தொடங்கும் இலங்கையின் வரலாற்றைச் சந்தேகப்படத் தொடங்கி விட்டனர். எமது வரலாற்று நூல்கள் முன்னரைப் போன்று விஜயனின் வருகையுடன் தொடங்குவதில்லை. அவை கற்கால நாகரிகத்திலிருந்து பொய்யான விஜயனின் கதையின் காலத்தை விடவும் மிக முற்பட்ட காலத்தில் இருந்து தொடங்குகின்றன. எமது வரலாற்று நூல்கள் நிரந்தரக் குடியிருப்புகள் விவசாயம், திறமைகளின் பயன்பாடு, இரும்பின் பயன், கற்பனையான விஜயனின் கதைக்கு முன்பே இடம்பெற்ற நகர மயமாதல் என்பவற்றை எமது நூல்கள் ஏற்கின்றன.

ஒரு சுவையான தகவல் என்ன என்றால், இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்தின் பழங்கால சரித்திரத்திலும் விஜயன் என்பவன் 700 நண்பர்களுடன் எந்தக் காலத்திலும் கரையை விட்டுப் பயணப் பட்டான் எனப் பழைய வரலாறு கிடையாது. எனவே நாம் இப்பொழுது கற்பனையான விஜயன் வருகைக்கு முற்பட்ட காலம் தொடங்கியே வரலாற்றை ஆரம்பிக்கிறோம். சரித்திர ரீதியாக பாளி மொழியில் எழுதப்பட்ட மகாவம்சத்தைப் புத்த மதத்தை பெருமைப் படுத்த எழுதப்பட்ட கற்பனை என நம்புவதே மிகவும் ஏற்கத்தக்க நம்பிக்கையாகும்.

இப்படித் சிங்கள தேசியவாதத்தின் ஆணி வேரையேப் புடுங்கி எறியும் இவரது அரசியல் ஒன்றுதான், இன்று நம் அவதியுறும் நிலைக்கு ஏற்ற மருந்து. இவை போல இன்னும் எத்தனையோ அதிர் வெடிகளைத் தமது கட்டுரையில் வெடிக்க வைத்து, சிங்களப் பேரினவாத பயங்கரத்தைச் சர்வதேச பார்வையில் தோரணம் கட்டி விட்டுள்ளார். ஏன் வேண்டும் தமிழ் ஈழம் தனது பயணத்தின் வெற்றியை இவர் மூலம் காண்கிறது.

(தொடரும்)




பகுதி.40

அவதானி

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்



இலங்கையை உளவு பார்ப்பதற்கு இந்திய உளவு நிறுவனமான றோ பெரும் வலைப்பின்னலையே ஏற்படுத்தியிருந்தது. இலங்கையில் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு பெரும் காரணிகளாக இருந்தவை, சிங்கள தமிழ் மக்களின் குணாம்சங்களேயாகும். உலக நாடுகளிலேயே இலங்கையில் மட்டுந்தான் சிங்கள மக்களும், சிங்கள மொழியும் இருக்கின்றது. சிங்கள மக்கள் தமது உரிமைக்கும், வாழ்க்கைக்கும் ஆபத்து ஏற்படக்கூடாதென்பதில் அனைத்து முயற்சிகளையும் அவர்கள் செய்வதில் எவ்விதத் தவறுமேயில்லை.

சிறுபான்மையினமான தமிழர்கள் தமது உரிமைக்காக, தமது சனத்தொகையிலும் கூடிய வலுத்திறன் கொண்டு போராடி வருகின்றமை, சிங்கள மக்கள் மத்தியில் பெரும் பயத்தினை ஏற்படுத்தியது என்பது எதார்த்தமானதும், ஏற்றுக் கொள்ளக்கூடியதுமாகும். நூற்றுக்கு தொண்ணூற்றியொன்பது வீதமான சிங்கள மக்கள் புத்த சமயத்தைச் சார்ந்தவர்கள். புத்த சமயத்தைத் தழுவும் நாடுகளின் பலமும் பார்வையும் சிங்கள மக்களுக்கு இருக்கின்றது. இலங்கையில் மட்டுமே சிங்கள மக்கள் இருக்கின்றார்கள் என்பதும் சிங்கள மக்களின் பலமாகும்.

இலங்கையில் தமிழ் மக்கள் சிறுபான்மை இன மக்களாக இருப்பதும், அதேவேளை இந்திய தென்பகுதி மாநிலங்களில் ஒன்று தமிழ் மக்கள் வாழும் மாநிலமாகவும், அம்மாநிலம் தமிழர்களால் ஆட்சி செய்யப்படுவதும், இந்திய அரசுக்கு இலங்கையைக் கையாள்வதற்கு மிகச் சிறந்த வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

தமிழக மக்களிடம் தமிழகத் தீவிர அரசியல் போக்குடைய அரசியல்வாதிகளால் அடிக்கடி சொல்லப்படும் கருத்து "மத்திய அரசு, எமது மாநிலத்தை ஒதுக்குமானால் நாங்கள் பிரிந்து போய் தனிநாட்டை அமைப்பது மட்டுந்தான் ஒரே வழி" என்ற கோட்பாட்டை நிறுத்திப் பிரச்சாரம் செய்வதுகூட இந்திய மத்திய அரசிற்கு சாதகமானதே! ஏனெனில் தனிநாடாக தமிழகம் பிரிந்துவிட்டால், இலங்கையின் வடக்கு கிழக்கு அதனுடன் இணைந்து விடலாம் என்ற அச்சத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் என்பதே இந்திய அரசின் நோக்கமாகும்.

இந்தியாவில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் எந்த மாற்றமுமே ஏற்படுவதில்லை. எவ்வாறு வெளிநாடுகளைக் கையாள வேண்டுமென்பதும், அதிலும் குறிப்பாக இலங்கையை எவ்விதம் கையாள வேண்டுமென்பதில் மாற்றம் எதுவுமே செய்யாத அடிப்படைக் கோட்பாட்டு விதியாகவே இருந்து வருகின்றது. எல்லா நாடுகளிலும் இந்தியா தனக்கான தூதுவர்களை நியமித்து வைத்திருந்தாலும், இலங்கையில் நியமிக்கப்பட்ட தூதுவரின் இந்தியாவுக்கானப் பணி அதிகமானதே!. சென்ற காலங்களைவிட

இந்தியா தனது வியூகத்திற்குள் இலங்கையைக் கொண்டு வந்துள்ளது என்பது தெளிவாகவே புரிகின்றது.

இலங்கையின் வடபகுதியில் பிரசித்திபெற்ற மிகப்பெரும் நகரமான யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் துணைத்தூதரகம் இருப்பதும், அத்தூதரகத் தூதுவராக ஒரு தமிழரை நியமித்து இருப்பதும், அண்மையில் அவர் மாவீரர் தினத்தன்று காந்தள் மலரென்ற (கார்த்திகைப் பூவை) அணிந்து கொண்டார் என்பதை, தமிழ் மக்கள் பூரிப்புடன் பார்த்த போதும்; இத்தகு பூரிப்பு நிலையை தமிழ்மக்கள் தொடர்ச்சியாக தமது மனநிலையில் கொண்டிருத்தலை இந்தியா தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றது. தூதுவரின் சட்டையில் கார்த்திகைப் பூ இருந்தமையும் தந்திரமேயாகும். விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகளாகத் தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருக்கும் இந்திய அரசின் முக்கிய அதிகாரி ஒருவர், கார்த்திகைப் பூவைச் சட்டையில் அணிந்தமை ஒரு நாடகமாகும்.






இந்திய உளவு நிறுவனமான றோ இலங்கையில் செய்யும் உளவு வேலைகளை விவரிக்கும் போது, நிகழ்காலச் சம்பவங்களையும் சொல்லிச் செல்வது உதாரணம் காட்டுவதற்கேயாகும். இக்கட்டுரையின் அண்மைய தொடர்களில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களுக்கு அடிகோலியது இந்தியாவே எனக் குறிப்பிட்டிருந்தேன். இப்பொழுது இப்பகுதியில் தமிழக மக்களின் பிரிவினைவாதப் போக்கை இந்திய மத்திய அரசு தனது அணுகுமுறைக்குச் சாதகமாக பயன்படுத்துகிறது என்பதையும் குறிப்பிட்டிருந்தேன்.


இந்தியாவிற்கு மிக அண்மையில் இலங்கையிருப்பதும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்குக் கிழக்குப் பகுதிகளும், இந்தியாவில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் தமிழ்நாடும், பாக்குநீரிணை, மன்னார் கடலினால் பிரிக்கப்பட்ட போதும் பூகோள ரீதியில் அண்மித்த நீர்பரப்புகளேயாகும். இந்த அண்மித்தல் என்பது இணைந்திருந்த நிலப்பரப்பைக் கடல்கோளினால் பிரிக்கப்பட்டது என்பதை பூகோளவிற்பவியலின் வரலாறு சொல்லியிருக்கின்றது.

இதனால் இலங்கையில் உள்ள தமிழர்களும், தமிழக தமிழர்களும், தமிழக அரசியல்வாதிகளும், இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளும் சொல்லுகின்ற "தொப்புள்கொடி உறவு" என்பதும்கூட இந்திய அரசிற்கு சாதகமானதே! இலங்கைத் தமிழர்களுக்கு அது பாதகமானதே!!

உலக நாடுகள் எவ்வாறு தத்தமது தூதரகங்கள் மூலம் உளவு வேலைகளைத் தத்தமது நாட்டின் உளவு நிறுவனங்களின் உதவியுடன், உளவு வேலைகளைச் செய்கின்றனவோ, அது போலவே இந்தியாவின் இந்தியத் தூதரகமும் தனது உளவு நிறுவனமான றோ மூலமாக இலங்கைக்குள் நிலைகொண்டு தொடர்ச்சியாகவே உளவு வேலைகளைச் செய்து வருகின்றது. இலங்கையின் சிறுபான்மையினமான தமிழர்களைப் போராட வைக்க வேண்டுமென்றால், சிங்கள அரசியல்வாதிகளைத் தூண்டிவிடுதல் வேண்டும், தமிழர்கள் மீது கோபப்பட வைக்க வேண்டும்.

(தொடரும்)

நந்தவனம் சந்திரசேகரன்



# ஓமிக்ரானும் ஓடாய்ப்போன வாழ்வும்

உலக மக்கள் அனைவருக்கும் இது துயர் மிகுந்த காலம். கடந்த இரண்டு வருடமாக கொரோனா நோயத் தொற்றால் சொல்லொன்னா துயரத்தில், உயிர்பயத்துடன் பல நெருக்கடிகளைச் சந்தித்து வரும் வேளையில் கொரோனாவின் மறுஉருவாக்கமாகத் தற்போது 'ஓமிக்ரான்' அச்சுறுத்தி வருகிறது. தென்னாப்பிரிக்காவில் முதன்முதலில் கண்டறியப்பட்ட பி-11529 என்ற வகைக் கொரோனாவுக்கு 'ஓமிக்ரான்' என்று பெயர் சூட்டப்பட்ட வைரஸ் இன்று உலகம் முழுவதும் வேகமாகப் பரவி வருகிறது.

'ஓமிக்ரான்' வைரஸ் ஒருவரிடம் இருந்து மற்றவர்களுக்கு வேகமாகப் பரவும் என்று மருத்துவ வல்லுநர்கள் கூறிவருகிறார்கள். ஆனால், பாதிப்பு அதிகமாக இருக்காது என்பதே நமக்கு ஆறுதலான விடயம். இந்த ஓமிக்ரான் கொரோனா வகையானது கவலைக்குரியக் கொரோனா வகையாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருந்தாலும், தீவிரமான பாதிப்புகள் எதையும் ஏற்படுத்துவதில்லை என்றே தென்னாப்பிரிக்கா மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அதே நேரத்தில் ஓமிக்ரான் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மிகவும் சோர்வாக உணர்வதாகவும், குறிப்பிட்ட வயதினருக்கு மட்டுமே கடுமையானச் சோர்வை ஏற்படுகிறது எனக் கூறமுடியாது. அனைத்து வயதினருக்கும் கடுமையான சோர்வு ஏற்படுவதாக தென்னாப்பிரிக்கா மருத்துவ சங்கத்தின் தலைவர் ஏஞ்சலிக் கோட்னி தெரிவித்துள்ளார். ஏற்கனவே பரவியுள்ள கொரோனாவால் மீளமுடியாத துயரத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கும் நிலையில், இப்படி புதிதுப் புதிதாக வரும் வைரஸ்களால் என்ன செய்யப்போகிறோம்? என்ற கவலையில் உலக மக்கள் அனைவருமே செய்வதறியாத அச்சத்தில் வாழ்வா? சாவா? என்று காலத்தைக் கடத்துகிறார்கள்.

கடந்த இரண்டு வருடமாகவே கொரோனாவின் பாதிப்பால் வேலை வாய்ப்பை இழந்து, தனிமனித வருமானம் பாதிக்கப்பட்டு, பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்துக்கொண்டே போகிறது. வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் என்றில்லாமல் எல்லா நாடுகளிலும் வைரஸ் விரியத்துடன் விளையாடிக்கொண்டிருகிறது. கடந்த காலங்களில் கொரோனா பரவலைத் தடுக்க, உலக நாடுகள் அனைத்தும் பொது முடக்கத்தை அறிவித்தன. இது ஓரளவுக்கு நன்மை என்றாலும், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதைத் தவிர்க்க முடியவில்லை. எனினும் கொரோனாவால் ஏற்படும் உயிர்ப் பலியிலிருந்து காப்பாற்றித் கொள்ள இது பயன்பட்டது என்பதையும் நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

கொரோனா வைரஸ் இயற்கையா? செயற்கையா? என்ற விவாதம் இன்னும் நடந்துகொண்டிருக்கும் நிலையில், இது திட்டமிட்ட சதி என்ற குற்றச்சாட்டையும் மறுக்க முடியவில்லை. இரண்டு தவனை தடுப்பூசி எடுத்துக் கொண்டால் கொரோனா பாதிப்பிலிருந்து தப்பிக்கலாம் என்று கூறிவந்த நிலையில், தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களையும் ஓமிக்ரான் தாக்கியது இன்னும் கூடுதல் சந்தேகங்களையும் எழுப்புகிறது.

இது சதியா? விதியா? என்பதோடு, எல்லாவிதமான நெருக்கடிகளுடன் வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என்ற சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பது மட்டுமே மறுக்க முடியாத உண்மை.

“கொரோனா நோய்ப்பரவல் என்பது திட்டமிட்ட சதிதான். நாங்கள் தடுப்பூசி எடுத்துத் கொள்ளமாட்டோம், எங்களுக்கு பொது முடக்கம் எதுவும் வேண்டாம், இயல்பான வாழ்க்கையில் வாழுவிடுங்கள்” என்று பல நாடுகளில் மக்கள் எதிர்த்துப் போராடத் தொடங்கியிருப்பதையும் நாம் அவதானிக்க வேண்டியதாக இருக்கிறது.

“மீண்டும் பொது முடக்கம் என்று, வாழ்வதாரத்தைச் சிதைத்து விடாதீர்கள்’ என்ற குரலே எங்கும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. ஏனென்றால் பொருளாதாரச் சிதைவுகளிலிருந்து மீண்டு வர வழிதெரியாமல் விழிபிதுங்கி நிற்கும் நிலையில், மீண்டும் ஓமிக்ரானை வைத்து பொது முடக்கம் என்று சிறையில் தள்ளிவிடுவார்களோ! என்று மக்கள் அச்சப்படுகின்றனர்.

ஓமிக்ரான் பரவல் அதிகரித்தாலும் பெரியப் பாதிப்பு எதுவும் இப்பாததால் பல நாடுகள் பொது முடக்கம் பற்றி யோசிக்காத நிலையில், இந்தியாவில் டெல்லி, மும்பை, கர்நாடகா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் மீண்டும் பொது முடக்கத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். மக்களின் வாழ்வாதாரம் பற்றி கவலைப்படாமல், பொது முடக்கத்தால் முழுமையானத் தீர்வை எட்டிவிட முடியுமா? என்பதையும் அதிகாரவர்க்கம் சிந்திக்க வேண்டும்.

ஓமிக்ரானைப் போல மீண்டும் இரண்டு உறுமாறிய கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வரும் செய்திகளால் எதிர்கால வாழ்வு என்னாகுமோ? என்ற வினாக்குறியிடனேயே ஒவ்வொரு விடியலையும் கடந்தது வருகிறோம்.



17 YEARS

**Radio - by - Phone**

# ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

## 00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி

வாசகர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் நண்பர்கள்
அனைவருக்கும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்

## 00 49 231 700 977 60

அழையுங்கள்! வானொலியைத்
கேட்டு மகிழுங்கள்..!!

மேலதீக விபரங்களுக்கு... **www.etr.fm**



Smt. லிதியா மயூரன், சுவிஸ்

# பரதநாட்டிய உலகியல் வரலாறு

ஆதியிலே பூமியில் தோன்றிய மனிதனுக்கு மொழி, ஞானம் உண்டாகவில்லை. அவனும் மற்றைய விலங்கினங்களைப் போலதான் சந்தோசத்தையும், துக்கத்தையும் வெளிக்காட்ட கத்தி, உறுமி பலவிதமான சத்தங்களையும் எழுப்பிக் கொண்டான். படிபடியாக அச் சத்தங்களில் இருந்து மொழி உண்டாகியது.

## தேவதாசிகளின் சதிர் நடனம்

தேவ என்றால் 'கடவுள்'. தாசி என்பதற்கு அர்த்தம் 'சேவகர்'. இறைவனுக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் தேவதாசிகள். தேவரடியார்கள் என்றும் அழைக்கப்படும் இவர்கள் ஆடல், பாடல் எனப் பல கலைகளில் வித்தகர்களாக இருந்தார்கள். இறைவனைத் திருமணம் செய்து கொள்ளும் இவர்களின் பணி, இறைவனுக்காக மட்டுமே இருக்கும். ஏறக்குறைய கடந்த 70 ஆண்டுகளாக இது 'பரத நாட்டியம்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. பரதநாட்டியம் தமிழ்நாட்டுக் கோவில்களில் தேவதாசிப் பெண்கள் ஆடிய சதிராட்டத்தின் நெறிமுறைப்படுத்தப்பட்ட வடிவமே ஆகும். நன்கு தேர்ச்சி பெற்றதொரு நாட்டியக் கலைஞரின் முகபாவனையில் நவரசங்களின் பாவனைகளையும் வெளிக்கொணருதலைக் காணலாம்.

## தமிழ் வரலாற்றில் நாட்டியம்

பரத நாட்டியம் என்ற சொல் வழக்கு, பிற்காலத்தில் வந்தது. ஆனால் இக்கலை வடிவம் மிகப் பழமையானது. தமிழில் நடனக்கலையை நாட்டியம், கூத்து, ஆடல், நர்த்தனம் என்று பல வகைகளாக அழைத்து வந்துள்ளனர். சங்கம் மருவிய காலத்திலேயே பரதநாட்டிய முறை இருந்தது என்பதை சிலப்பதிகாரம் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம். இந்நூலில் இந்நாட்டிய முறை குறித்த கருத்துகள் மிகுதியாக காணப்படுகின்றன. தேவதாசி மரபு கொண்ட சித்தராபதியின் மகளான மாதவி, தனது 5 வயதிலேயே நாட்டியம் கற்க தொடங்கி, பின்னர் 12 வயதில் தலைசிறந்த நடனக்கலைஞராக, காவேரி பூம்பட்டினத்தில் நடந்த இந்திர திருவிழாவில் மன்னர் முன் நடனமாடினார். மனம் மகிழ்ந்து போன சோழ மன்னன் மாதவிக்கு 1,008 பொற்காசுகளையும், தலைகோல் பட்டத்தை வழங்கி கௌரவித்தார் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

கூத்துக் கலையை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர் 'கூத்தர்'. அவர் தம் பெண்பாலார் 'கூத்தியர்' இவர்களில் சிலர், விறலியர் என்றும் அழைக்கப்படுவர். இவர்கள் ஆடிப் பாடி, அபிநயங்கள் செய்து பழந்தமிழக மன்னரையும், மக்களையும் மகிழ்வித்தனர். பரிசாகப் பொன்னும், பொருளும் பெற்று

வாழ்ந்தனர். இவர்களது வாழ்க்கைப்பற்றி சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

## உயர்ந்த நிலையில் இருந்த சதிர் நடனக் கலைஞர்கள்

கடவுளுக்கு மட்டுமே சேவை செய்ய தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த தேவதாசிகளுக்கு சோழர் காலத்தில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் தரப்பட்டதாக கூறுகிறார் வரலாற்றாய்வாளர் குடவாயில் பாலசுப்பிரமணியன்."கோவிலில் பணிபுரிந்த இவர்கள் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தார்கள். பல கோயில்களுக்கு தானம் செய்திருக்கிறார்கள். எந்த விதத்திலும் அவர்கள் தாழ்வாக நடத்தப்படவில்லை. சோழர் காலத்தில் எந்த சதிர் நடனக்கலைஞரும் மன்னரின் அரண்மனையிலோ, அந்தப்புரத்திலோ ஆடியதாக வரலாற்றில் இல்லை. கவின் கலைகள் அனைத்தும் கோயில்களில் மட்டுமே அரங்கேற்றப்பட்டன. அவர்களுக்குத் தலைமை 'கடவுள் மட்டுமே' என்று அவர் கூறுகிறார்.

## ஆதரவை இழந்த சதிர் நடனக் கலைஞர்கள்

சதிர் நடனம் என்பது பரதநாட்டியமாக மாறியது குறித்து நாட்டிய வரலாற்றாய்வாளர் ஆஷின் மோகன் கூறுகையில், "தேவதாசிகளின் நடனம் என்பது கேளிக்கை அல்லது பொழுதுபோக்கிற்காக இருக்கவில்லை. அவர்களின் நடனம் இறை வழிபாட்டின் ஒருமுறை. கலை, இசை, நடனம் எல்லாம் கோயில்களுக்கானது. பண்டைய காலத்தில் ஒரு கிராமப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு கோயில்களுக்கு உண்டு. மக்கள் அதிகம் கூடும் இடமாகவும் அது இருந்தது. அங்கு தேவதாசிகள் நடனம் ஆடுவதைப் பக்தர்கள் பார்ப்பார்கள். அவர்களுக்கு சம்ஸ்கிருதம், கீர்த்தனை எதுவும் தெரியாது என்றாலும், அவர்கள் அதனைக் கண்டு களிப்பார்கள். கோயில் சமூகத்தில் முக்கிய பங்கு வகித்தது.

பின்னர் 1880களில், பிரிட்டிஷ் காலத்தில் கோயில்களில் நடனம் ஆடும் வழக்கத்திற்குத் தடை விதித்தார்கள். அவர்களின் ஆட்சியில் மன்னர்கள், ஜமீன்தார்கள் அனைவரும் பாதிக்கப்பட்டனர். அதன் விளைவாக கோயில்களும், வளங்களும் பாதிக்கப்பட்டன. அதனால் கோயிலுக்குச் சொந்தமான தேவதாசிகளும் நேரடியாகப் பாதிக்கப்பட்டனர். பிரிட்டிஷ் படையால் கிராமப் பொருளாதாரம் அடிபட, கோயில்களிலேயே இருந்து வணங்கி சேவை செய்து கொண்டிருந்தவர்கள், இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஆனால்...

**அடுத்த இதழில் சந்திப்போம்**



# உள்ளம்

## திறக்கும் உண்மைகள்





"உளம் திறக்கும் உண்மைகள்...;" என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### அன்பு

அன்பு மட்டும் தான்
உலகில் என்றுமே
நிலையானது.
அன்பு உண்மையாவதும்,
பொய்யாவதும்
நேசிப்பவர்களின்
நேசிக்கப்பட்டவர்களின்
புரிதலைப் பொறுத்தே
அன்பு ஆழமாகிறது.
எங்வளவுதான் அன்பை
மரணிக்க செய்தாலும்,
உண்மை அன்பு
மீண்டும், மீண்டும்
உயிர் பெற்று விடும்.
'அன்பு'
என்றும் அழிவதில்லை.

**நந்து**

### பெண்!

தாலிக்கொடிகள் வழிப்பறி
தாலிக்கு ஏங்கும் முதிர்கன்னிகள்
தாலியே வேலி என்னும் சமூகம்
தாலி முப்பது பவுனில் வேண்டும்
தாலிக்கு அடம்பிடிக்கும் - பெண்!

### ஆட்சி பீடம்!

அம்மி
தேடுவாரற்றுக் கிடக்கின்றது
ஆட்டுக்கல்
இருந்த இடம் தெரியவில்லை
உரல் உலக்கை
காணாமல் போனது
மிக்ஸ்ஸி ஆட்சிபீடத்தில்
கோலோச்சுகின்றது!...



### பட்டம்!

சிறுவயதுக் கனவுகளில் ஒன்று
கல்வியில் பட்டம்பெற வேண்டும்
காலம் கரைந்து ஓடியது - இப்போ
பட்டம் விட்டு விளையாடுகின்றேன்!...

### தவிப்பு!

கொரோனாவின் தாண்டவம்
கை காட்டும் குழந்தைகள்
கை தொட்டிட முடியாமல்
பரிதவிக்கும் பெற்றோர்கள்!..

**வைரமுத்து சிவராசா,** யேர்மனி

# அகர கவிக்களம்....



## தேனீர்

குடித்து குடித்து சுவைகண்ட
நாக்கு மீண்டும் மீண்டும்
தேடித்தேடி அலையும் அபூர்வம்
தேனீரால் மட்டுமே!!!

ஏழைகள்
அரை வயிறு தின்றாலும்
அற்புதமான பாச பிணைப்புடன்
அம்மா உடன் பிள்ளைகள்
அழகான குடும்பம் மகிழ்வுடன்
மலை உச்சியில் வானத்தின்
அணைப்பில் அணையாத குளிரிலும்
மலர் பிடுங்கி மாலை தொடுத்து
தாய் நிழலில் குஞ்சுகளாய்
விளையாடும் அழகோ அழகு



## பாரதி


பாரதி நீ தீ கொண்டு வா
பாரில் தீட்டுக்களை அழித்திட
தீயாய் எழுந்து தீபமாய் ஒளிர்ந்திட
மிடிமை வாழ்வு அகற்றி ட
மூட நம்பிக்கை கழைந்திட
மீண்டும் உதித்திடு பாரதி
ஜகத்தினை வென்றிட

மலை
பச்சை கம்பளத்தை முகடு மீது
பரவி போர்த்து மங்கையவள் எட்டி
பார்த்து வானத்தை முறைக்கிறாள்
பார்வையில் அவள் பார்வை யில் வானம்
பாரிவளின் நாணமில்லா ஆசையை இப்படி
பார்க்கிறாளே! பச்சை அழகி என்னை!

**கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்**
யாழ்ப்பாணம்

## மாறவில்லை

கொரோனா வந்தும்
குவலயம் மாறவில்லை.
குறள் வழி வாழ
கொஞ்சமும் நினைக்கவில்லை.
அகங்காரம், ஆணவம்
தலைக்கேறித் தடுமாறுது.
புகழ் கேட்டு பூமியில்
போதை கொண்டு அலையுது.
இவர்தான் இப்பூமியின்
அரக்கர்களோ.
அரக்கர் வலிமை போர்தான்
காலப் போக்கில்
இவரும் காணாமல்
போகலாம்.
மமதை கொண்ட மனிதரும்.



## காலமும் நேரமும்

கோள்களின் சுழற்சி
அடிக்கடி மாறும்.
குமுகத்தின் மலர்ச்சி
இடைக்கிடை மாறும்.
கிரகங்கள் ஆட்சி
சிந்திக்க வைக்கும்.
நல்லதும் நடக்கும்.
இரண்டையும் தாங்கும்
இதயமும் வேண்டும்.
நல்ல காலம் வருகையில்
மகிழ்வதும்.
கூடாத காலம் வருகையில்
வருந்துவது மனித இயல்பு.
இரண்டையும் ஜீரணிக்கும்
சக்தி வேண்டும்.
அதைத் தருவது
இறைசக்தி.
இதை நினைவில் கொண்டால்
சந்தோஷமாக வாழலாம்.

**கெங்கா ஸ்ரான்லி**

**சண் தவராஜா**

பழைய ஆண்டு கழிந்து, புதிய ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் தருணத்தில் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மீண்டும் ஒருமுறை பேசுபொருளாக மாறியுள்ளது. ஆயுதப் போராட்டத்தின் பலனாக இதுவரை கிடைத்த ஒரேயொரு அரசியல் தீர்வாகக் கருதப்படும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தமிழ் மற்றும் முஸ்லிம் தரப்புகள் இடையே மற்றுமொரு சுற்று விவாதம் உருவாகியுள்ளது. 1987க்குப் பிந்திய காலகட்டத்தில், பல தடவைகளில் இதுபோன்ற விவாதங்கள் இடம்பெற்று இருந்தாலும், முன்னரைப் போலவே நம்பிக்கை ஊட்டக்கூடிய விதத்தில் அதனைக் கட்டமைப்பதில் கட்சிகள் வெற்றி கண்டுள்ளன. தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் ஏதோ ஒன்று நடைபெறப் போகின்றது என்ற நம்பிக்கையை ஊட்டும் வண்ணமான ஆரவாரங்களுக்கும் அளவில்லை. ஊடக வெளிச்சமும் இது தொடர்பான செய்திகளுக்கு அளவுக்கு அதிகமாகவே இருப்பதையும் பார்க்க முடிகின்றது.

# 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோருவது யாருக்காக?

அண்மையில் ஆரம்பமான விவாதத்தை ஆரம்பித்து வைத்த பெருமை(?) தமிழீழ விடுதலை இயக்கத்தையே சாரும். இந்த இயக்கத்தின் சார்பிலேயே தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் மிகப் பெரிய தமிழ் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி கலந்து கொண்டிருக்கவில்லை. அதேவேளை, ரவூப் ஹக்கிம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு முன்னணி ஆகிய கட்சிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கோரி, இந்திய அரசாங்கத்துக்கு ஒரு அறிக்கையை அனைத்துக் கட்சிகளின் சார்பில் அனுப்பி வைப்பதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாக இருந்தது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி கலந்து கொண்டிராமை தொடர்பில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில் தமிழரசுக் கட்சி, இரா சம்பந்தன் தலைமையில் கலந்து கொண்டிருந்தது. இலங்கை அரசாங்கம் பல்வேறு தடவைகளில் பகிரங்கமாக வாக்களித்திருந்தபடி 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பாலான அதிகாரப் பகிர்வுகளைக் கோருவது எனவும், அதனை வலியுறுத்தும் வகையில் புதிய வரைவு தயாரிக்கப்பட்டு, அதில் அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் கையொப்பம் பெறுவது எனவும் இந்தக் கூட்டத்தில்



தீர்மானிக்கப்பட்டது. அத்தகையை வரைவைத் தயாரிக்கும் பொறுப்பு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான சுமந்திரனிடம் கையளிக்கப்பட்டது.

புதிய அரசியலமைப்பு ஒன்றை வரையும் பொறுப்பு நிபுணர் குழுவொன்றிடம் சிறிலங்கா அரசாங்கத்தினால் கையளிக்கப்பட்டுள்ள நிலையிலும், அந்த வரைவு விரைவில் அரசாங்கத்தினால் பகிரங்கப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையிலும், இன்றைய காலகட்டம் என்பது மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. அரசியலமைப்பு வரைவுக் குழுவுக்குப் பல்வேறு அரசியல் கட்சிகளும், அரசு சாரா நிறுவனங்களும் தமது ஆலோசனைகளை வழங்கியுள்ள நிலையில், இறுதி வரைவில் என்னென்ன அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன? என்ற விடயம் இரகசியமாகவே உள்ளது.

உத்தேச அரசியலமைப்பு பகிரங்கப்படுத்தப்படுமா? அல்லது சிறிலங்காவில் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட பல்வேறு ஆணைக் குழுக்களின் அறிக்கைகளுக்கு நடந்ததைப் போன்று காணாமல்போய் விடுமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். பல்வேறு தடைகளைத் தாண்டி(?) அறிக்கை வெளிவரினும் அது அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமா? என்பதுவும் பெறுமதிமிக்க கேள்வி.

மறுபுறம், தமிழ்க் கட்சிகள் மற்றும் தமிழ் பேசும் கட்சிகள் தங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைக் கைவிட்டு, ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்து, இலங்கை - இந்திய உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்துமாறு இந்திய அரசாங்கத்தைக் கோரும் ஒரு ஆவணத்தில் முழுமனதோடு கையொப்பம் இடுவார்களா? என்பது கேள்விக் குறியே.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவது என்பது




அடிப்படை அம்சங்களுள் ஒன்று. இது தொடர்பில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற விதி இருந்த போதிலும், தற்காலிகமாகவேனும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏற்றுக் கொள்வார்களா? என்பது சந்தேகத்துக்குரியதே. முன்நிபந்தனையாக தனியான முஸ்லிம் அலகு வைக்கப்பட்டாலும் கூட, தமிழ்த் தரப்பில் உள்ள தேசியம் பேசும் கட்சிகள் அனைத்தும் அதனை ஏற்றுக் கொள்ளுமா? என்பது அடுத்த கேள்வி. யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் 1990இல் வெளியேற்றப்பட்ட விடயத்தில் பகிரங்க மன்னிப்புக் கோரவே தயாராகவில்லாத தமிழ்க் கட்சிகள் சில அல்லது சில அரசியல்வாதிகள் 'முஸ்லிம் தனி அலகு'க் கோரிக்கையைப் பரிசீலனைக்கு எடுப்பதற்குக் கூடத் தயாராக இருப்பார்களா? என்பது சந்தேகமே.

சிறிலங்காவைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கில் இன்று தமிழ்த் தரப்பின் மிகப் பெரிய கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே உள்ளது. இந்தக் கட்சியையும், கட்சியின் கொள்கைகளையும் ஏற்றுக் கொள்ளாமல் முரண்பட்டு வெளியேறியவர்களே ஏனைய தமிழ்க் கட்சிகளைப் பெரிதும் பிரதிநிதித்துவம் செய்யும் நிலையில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தினால் முன்மொழியப்பட்ட ஒரு திட்டம், இறுதி வெற்றியைக் காண மனப்பூர்வமாக விரும்புவார்களா? என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு சில கட்சிகளின் அணுகுமுறைகள், அவற்றின் நோக்கம் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துவதே என ஊகிக்கும் வகையிலேயே உள்ளதையும் பார்க்க முடிகின்றது.

இலங்கைத் தீவில் பரந்து வாழும் தமிழ் பேசும் மக்களின் சார்பில் ஒரு ஒற்றுமை உருவாகுமேயானால், அது வரவேற்கப்பட வேண்டியதே!. எனினும், சந்தர்ப்பவாதக் கூட்டு முயற்சி என்பது, ஏற்கனவே உள்ள விரிசல்களை மேலும் அகலப்படுத்தவே உதவும் என்பதே யதார்த்தம்.

இந்த விடயத்தில், கேட்கப்படாமல் உள்ள கேள்வியொன்று உள்ளது. தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பில் இந்திய மத்திய அரசுக்கு உண்மையாகவே தெரியாதா? தற்போது அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஒரு அறிக்கையை அனுப்பிய பின்னர்தான் அது தொடர்பாக இந்திய மத்திய அரசு அறியுமா? அவ்வாறாயின் இதுவரை இந்திய மத்திய அரசு தமிழர் தரப்புகளுடன் அவ்வப்போது மேற்கொண்ட சந்திப்புகளில் தெரிந்து கொண்ட விடயங்களுக்கு என்ன நடந்தது? ஒரு அரசின் கொள்கை வகுப்பு என்பது, நீண்ட காலச் செயல்முறையாகவே இருக்கும் என்பது இலகுவில் ஊகிக்கக் கூடியதே!. அவ்வாறான நிலையில், தற்போது அனைத்துக் கட்சிகளும் இணைந்து தயாரிக்கும் அறிக்கையை மையப்படுத்தியே இந்தியா செயற்படும் என்பது போன்ற பிம்பம் கட்டியெழுப்பப்படுவது யாரைத் திருப்திப்படுத்துவதற்காக?

சிறிலங்காவைப் பொறுத்தவரை, தற்போதைய அரசாங்கம் பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கிடக்கிறது. அது மட்டுமன்றி மக்களின் ஒட்டுமொத்த வெறுப்புக்கும் இலக்காகி இருக்கின்றது. சிங்களப் பேரினவாதச் சிந்தனையைக் கிளறியே ஆட்சியைப் பிடித்த ராஜபக்சக்களின் பிடி படிப்படியாகத் தளர்ந்து வருகின்றது. தங்களின் பிடியை இறுக்குவதற்கு அவர்கள் பல வழிகளாலும் முயற்சித்து வருகின்றனர். 'தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் இணைந்த முயற்சி, இந்தியாவை நேரடியாக உள்விவகாரங்களில் தலையிட அழைத்தல்' என்பன போன்ற காரணங்களை முன்வைத்து மீண்டும் ஒரு தடவை இனவாதச் சிந்தனையைக் கிளறுவதற்கு இடமளித்து விடக்கூடாது. இது விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ள கட்சிகளும், தலைவர்களும் கவனமெடுத்தல் நல்லது.


யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
வாடிக்கையாளர் அனைவருக்கும்
தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்
2022ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள் மற்றும்
அனைத்து கவறிங்
நகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்



பாகம் ? 22

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

ஈழப் போரிலிருந்து நாம் கற்க வேண்டுமானால், புலிகள் ஏன் 2009-இல் வெற்றியடையவில்லை என்று கேட்கக்கூடாது. அதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள பெரிதாக ஒன்றுமில்லை. அது இரட்டை கோபுரத் தாக்குதலின்பின் திடீரென்று மாறிய உலக நாடுகளின் நிலைப்பாடுகள்தான் முக்கிய காரணம். அதுபோன்ற திடீர் மாற்றங்களை யாராலும் கணிக்க முடியாது. நாம் ஈழப் போரிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய சரியான கேள்விகள் என்பது, ஏன் மூன்றாம் ஈழப்போர் வரை புலிகள் மாபெரும் வெற்றிகளைப் பெற்று வந்தார்கள்? அதற்கு எப்படி தெற்காசியாவிலேயே யாராலும் முடியாதபடி சிக்கலான அமைப்புகளைக் கட்டி எழுப்ப முடிந்தது? இனி தமிழ்த்தேசியம் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கு என்ன செய்யவேண்டும்? என்பவைதான். அந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே இக்கட்டுரைத் தொடர் எழுதப்பட்டுள்ளது. இந்தக் கேள்விகளுக்கான விடைகளையே இந்தக் கட்டுரைத் தொடரின் முந்தைய பாகங்களில் ஆராய்ந்தோம். அவற்றைச் சுருக்கமாகத் தொகுத்து, சில விடுபட்ட கருத்துகளையும் சேர்த்து அளிப்பதுதான் இக்கட்டுரைப் பகுதியின் நோக்கம்.

### புலிகள் சிக்கலான அமைப்பாக வளர்ந்து பல வெற்றிகளைப் பெற்றதற்கு முக்கிய காரணிகளாக நான் கருதுவது

**பரிணாம இயக்கம்:** புலிகள் இயக்கம் என்பது ஈழச்சூழலுக்கு ஏற்ப பரிணமித்த தனித்துவமான பரிணாம இயக்கம். பரிணாம இயக்கங்கள் திட்டமிட்டு கட்டி எழுப்பப்படுவதல்ல. அது சூழலுக்கேற்ப கற்று படிப்படியாக தகவமைத்து ***(adapt)*** பரிணமிக்கும் இயக்கம். ஆயுதப் போராட்ட ஆரம்ப காலத்தில் பல்வேறு இயக்கங்கள் பல்வேறு கருத்தியல் வேறுபாடுகளுடன் தோன்றின. அவற்றிற்கிடையே யார் சிறப்பாக ஈழ விடுதலையை முன்னெடுக்கிறார்களோ, அவர்களுக்கே மக்களின் ஆதரவு பெருகும். இவ்வாறு இயக்கங்களுக்கிடேயே ஒரு பரிணாமப்

போட்டி ஆரம்பிக்கிறது. பரிணாமத் தத்துவத்தின்படி எந்த இயக்கம் ஈழச்சூழலுக்கு ஏற்றபடி கற்று, தங்களைச் சரியாக தகவமைத்துக் கொள்கிறார்களோ, அவர்களே வெற்றி பெறுவார்கள். முடிவில் அந்தப் பேறு புலிகளுக்கே கிடைத்தது.

புலிகளின் கற்றல் என்பது இந்த பரிணாமப் போட்டியின் விளைவாகவே உருவானது. போட்டி இல்லாமல் இயக்கங்கள் கற்கவும் முடியாது, வளரவும் முடியாது. புலிகள் பலமான இராணுவமாகப் பரிணமித்த பின்பும் கற்றல் நின்று விடவில்லை. உலக இராணுவ உத்திகளைக் கற்றது மட்டுமில்லாமல், ஒவ்வொரு போரிலும் அனுபவம் பெற்று, புதிய உத்திகளை, அமைப்புகளை, படைப்பிரிவுகளை உருவாக்கிக் கொண்டே இருந்தார்கள். படைப் பிரிவுகளுக்குள்ளே யார் எதிரியுடன் போரில் சிறக்கிறார்கள் என்ற போட்டியும் உருவாகிறது. இதன் விளைவாக பல சிறப்பான படையணிகளும், தலைவர்களும் பரிணமிக்கிறார்கள். கடற்படை, விமானப்படை எனப் புதிது புதிதாகப் பரிணமித்துக் கொண்டே இருந்தார்கள். இவ்வாறு படிப்படியாகப் பரிணமித்துதான் புலிகள் ஒரு சிக்கலான அமைப்பாக உருப்பெற்றார்கள். சிக்கலான அமைப்புகளின் தன்மை என்னவென்றால் அவற்றை நம்மால் பரிணமித்துதான் அடையமுடியும், முழுத்திட்டமிட்டு அடைய முடியாது. புலிகள் பலம் வாய்ந்த இயக்கமாக மாறுவதற்கும், பல வெற்றிகளைப் பெறுவதற்கும் ஒரு அடிப்படைக் காரணம் அவர்கள் இவ்வாறு பரிணாம உத்தியின் வழியாக பயணித்ததே

## புலிப்பண்பாடு

ஒரு பெரிய கட்டிடம் கட்டுவதற்கு பலமான அடித்தளம் வேண்டும். அதுபோல ஒரு பெரிய இயக்கத்தைக் கட்டி எழுப்பத் தேவையான அடித்தளம் என்பது பண்பாடு தான். பொதுவாக தமிழ்ச்சமூகம் என்பது நண்டுகள் எவ்வாறு ஒன்றை ஒன்று பின்னுக்கு இழுக்கிறதோ, அதுபோல ஓர் ஒற்றுமையற்ற சமூகம். இவ்வாறு செயல்படும் நண்டுகளை வைத்து, ஒரு பெரிய இயக்கத்தைக் கட்டி எழுப்புவதென்றால், அது முடியாத காரியம். இதிலிருந்து தப்பிக்க ஒரேவழி மாற்றுப் பண்பாடுதான். அதை உணர்ந்து பிரபாகரன் அவர்கள் உருவாக்கியதுதான் அதியுயர் ஒத்துழைப்பான “புலிப் பண்பாடு”. புலிப்பண்பாடு என்பது தனிப்பட்ட சமூகம், சுயம், விதிகள், ஓட்டம், சடங்குகள், வரலாற்று சாயல், சுயநல ஒழிப்பு என்ற ஏழு முக்கிய காரணிகளை உள்ளடக்கியது. இதைக்கொண்டு எதற்கும் உதவாத நண்டுகளை எடுத்து, உலகில் அனைவரையும் விஞ்சிய புலிகளாக மாற்றிக்காட்டினார்.




**சிக்கலான உத்திகள்:** உலக இராணுவங்கள் முழுத்திட்டமிட்டு செயல்படும் முறைகளைப் பின்பற்றினார்கள். (நியூட்டன் சட்டகம்). ஆனால், புலிகள் அதிக எண்ணிக்கையில் வேறுபட்ட உத்திகளும், முழுத் திட்டமிடல் இல்லாத சந்தர்ப்பவாத அணுகுமுறையைப் பின்பற்றினார்கள். (சிக்கலமைப்பு சட்டகம்). புலிகள் இந்த உத்திகளைக் கொண்டு, உலக இராணுவ வல்லுனர்களின் ஆலோசனையுடன் இயங்கிய சிங்கள இராணுவத்தை, இரண்டு தசாப்தங்களாக விரட்டி விரட்டி அடித்தனர். இதை உலக இராணுவ உத்திகளின் தோல்வியாகவே பார்க்க வேண்டும். புலிகளின் உத்திகள்தான் சிறந்தது என்று சென்ற நூற்றாண்டின் இறுதியில்தான் சிக்கலமைப்பு பற்றிய ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தின. அதன் பின்னரே உலக இராணுவங்கள் தங்கள் உத்திகளை மாற்றின. புலிகள் உத்திகளில் முன்னோடிகளாக இல்லாமல் இந்திய சிங்கள இராணுவங்களை பலமுறை வெற்றி பெற்றிருக்க முடியாது. உலக இராணுவங்கள் இன்னும் பல நூற்றாண்டுகள் புலிகளை கற்றுக்கொண்டிருக்கும்.

**சிக்கனம்:** பரிணாமத்தில் சிக்கனமாக இயங்கி வாய்ப்புகளைப் பெருக்கும் இயக்கமே வெற்றி பெறும். இருக்கும் பொருளாதாரத்தையும், ஆட்பலத்தையும் கொண்டு எந்தப் படையணிகளை உருவாக்கினால் அதிக வாய்ப்புகள் கிட்டுமோ, அதுபோன்று படையணிகள் கீழிருந்து மேலாக ஒவ்வொரு அடியாக கட்டியமைக்கப்பட்டது. ஒவ்வொரு அடியிலும் சிக்கனம் பேணப்பட்டது. அதுபோக சிக்கனத்திற்கு மேலும் உதவிய செயல்பாடுகள் என்பன: எதிரிகளைவிட சூழலையும், உத்திகளையும் பற்றிய அதிக அறிவு, துல்லியமான தகவல்கள், ஆழ ஊடுருவி தாக்கும் வீச்சு, எதிரியின் ஆற்றலை உறிஞ்சுதல், புதுமைகளைப் படைத்தல் ஆகியன. இவ்வாறு செயல்பாடுகளில் சிக்கனத்தைக் கடைபிடித்ததனால்தான் புலிகள் தங்களைவிட பலமடங்கு பொருளாதார பலம்வாய்ந்த எதிரிகளை வீழ்த்த முடிந்தது.

**நம்பிக்கை:** நாம் வாழும் உலகம் எவ்வாறு பரிணமிக்கும் என்பது முன்கூட்டியே தீர்மானிக்க முடியாதபடி சிக்கலானது, எண்ணற்ற காரணிகளை உள்ளடக்கியது. நாம் விரும்பும் எதிர்காலத்தை உறுதியாக 100% அடையும் திட்டம் ஒன்றை யாராலும் உருவாக்க முடியாது. அவ்வாறு இருக்கும் பொழுது நாம் விரும்பும் எதிர்காலத்தை அடைய துணிவுடன் நம்பிக்கையின் அடிப்படையிலேயே அணுகமுடியும்.

புலிகளின் அசுர பலத்திற்கு ஒரு முக்கிய காரணம் அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்தியாவோ, இலங்கையோ, ஏன் இந்த உலகமே ஒன்று திரண்டு எதிர்த்த பொழுதும் அவர்கள் நம்பிக்கையுடன் தெளிவாகவே செயல்பட்டார்கள். நம்பிக்கையைப் பற்றி ஒன்றை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். வெறும் நம்பிக்கை மட்டும் என்றால் அது குருட்டு நம்பிக்கை. அதுபோன்ற நம்பிக்கைகள் சமூகத்தில்



அநீதியை உருவாக்கி, மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தும். மத நம்பிக்கைகள் அதுபோன்ற குருட்டு நம்பிக்கைகளே. நம்பிக்கையுடன் பகுத்தறிந்த செயல்பாடுகளும் இணையும் பொழுதே சமூகத்தில் நீதி நிலவும் என்கிறார் தத்துவமேதை பிளேட்டோ. அதுபோன்ற பாதைதான் புலிகளின் பாதை.

இன்று நாம் இனவழிப்பு, நிலம் பறிப்பு, மொழி அழிப்பு, அடையாள அழிப்பு என்று பல்வேறு சிக்கல்களை தமிழர் தாயகத்தில் எதிர்கொண்டுள்ளோம். அதுபோக புலத்திலும் நமது அடையாளத்தை அடுத்த தலைமுறைகளிடம் கடத்துவதிலும் பெரிய சிக்கல்களை எதிர்நோக்குகிறோம். இச்சிக்கல்களை நேருக்கு நேராகச் சந்தித்து தீர்வு காண்பது இன்றைய காலகட்டத்தில் முக்கியமானது. அதை நாம் செய்யத் தவறினால் இன்னும் சிலதலைமுறைகளில் தமிழ் பேசுபவர்களும் இருக்கமாட்டார்கள், தமிழர் என்று கூறிக்கொள்பவர்களும் இருக்கமாட்டார்கள். மக்கள் அந்தந்த நாட்டு தேசிய அடையாளங்களில் கரைந்து காணாமல் போய் விடுவர். இன்றைய நிலைமையில் இச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கான தெளிவான முறையான சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை.

புலிகள் உலக இராணுவங்களின் கண்ணில் விரலைவிட்டு ஆட்டும் அளவுக்கு உத்திகளில் முன்னோடியாக இருந்தார்கள், ஆனால் இன்று நாம் செயலற்று நிற்கிறோம். அன்று புலிகள் பயன்படுத்திய உத்திகளை இன்றைய தமிழ்த் தேசிய செயல்பாடுகளுடன் ஒப்பிட்டால் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம்தான் தெரிகிறது. அதற்கு இன்றைய தமிழ்த் தேசியத்தைக் குற்றம் கூற முடியாது. புலிகளின் உத்திகளை முழுதாகப் புரிந்து கொள்வதற்கு புலிகள் தங்கள் உத்திகளை இரகசியம் காரணமாக ஆவணப்படுத்தவில்லை அல்லது அவ்வாறான ஆவணங்கள் 2009-இல் அழிந்து போயிருக்கலாம். அதனால் நாம் பின்னோக்கி அவர்களின் செயல்பாடுகளை நவீன அறிவியல் தத்துவங்களின் வாயிலாக ஆராய்வதின் மூலமே அறிந்து கொள்ளமுடிகிறது.






கஜாலினி

# மலையகத்திற்காக ஒருத்தி

துகள் 2021 நடாத்திய சிறுகதைப் போட்டிக்கு அனுப்பப்பட்ட சிறுகதை “மலையகத்திற்காக ஒருத்தி”. எழுதியவர் கண்டியைச் சேர்ந்த செல்வி ச.கஜாலினி. மலையகத்திலே பிறந்து, அங்கு கல்விகற்று, இப்போது ஓர் இளைய ஆசிரியராகப் பணியாற்றும் கஜாலினி அவர்களின் சமூகப் பொறுப்பையும், அவரது எழுத்தாற்றாலையும் வளர்க்கும், வகையில் இந்தச் சிறுகதை அகரம் மாத இதழில் வெளியிடப்படுகின்றது. வளர்ந்துவரும் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் அகரம் சஞ்சிகைக்கும் எமது நன்றி.

**- துகள்**

**பகுதி-3**

கல்வியில் பின்தங்கியிருந்த மாணவர்களை முன்னேற்றமடையச் செய்ய, அவர்களுக்கு ஏற்ற கற்றல், கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி கற்றலில் ஈடுபடச் செய்தாள்.

### சென்ற இதழின் தொடர்ச்சி

மாணவர்களுக்குத் தேவையான அன்பையும், ஆதரவையும், ஆலோசனைகளையும் அவ்வப்போது வழங்கிக் கொண்டிருந்தாள். மாணவர்களும் ஷர்மிளா டீச்சரை தனது சொந்தத் தாயாக எண்ணி, தமக்குப் பிரச்சினை வரும் போதெல்லாம் அவரை நாடித் தீர்வு பெற்றுக் கொண்டனர். கல்லூரியில் வழிகாட்டுதலும், ஆலோசனைக் கூறுதலும் பாடத்தை ஆர்வத்துடன் கற்ற, பயனாக அந்தச் சிறு பாடசாலையில் கவுன்சிலிங் டீச்சர் ஆகவே மாறிவிட்டாள்.

அதேபோல பெற்றோர் கூட்டங்களை ஏற்பாடு செய்து, புதிய யுக்திகளைப் பயன்படுத்தி பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பில் அக்கறை காட்டவேண்டியதன் அவசியம், அவர்களின் பங்கு என்ன? என்பனவற்றை எடுத்துரைக்க பல ஏற்பாடுகளைச் செய்தாள். மலையக மக்களின் அறியாமையைப் போக்கி, கல்லாதவர்களும் தெளிவு பெறும் வகையில் அவர்களை நல்வழிப்படுத்தப் பல ஏற்பாடுகள் நடக்கலாயிற்று.

மாணவர்களில் ஏற்பட்ட மாற்றங்களும், அவர்களின் அன்பும் அவளது சேவையை அவள் சிறப்பாக செய்வதை உணர்த்தியது. தனது முயற்சி வெற்றியளிக்கும் என நம்பிக்கையோடு இருந்தவளுக்கு, தலையில் இடி விழுந்தது போல் அதிர்ச்சியான ஒரு சம்பவம் காது வந்து சேர்ந்தது.

“கற்பழிக்கப்பட்டு கர்ப்பமான அந்த சிறுமி பிரசவித்த பச்சிளம் குழந்தை பிரசவத்தின் போதே இறந்து விட்டது என்பதே அந்த செய்தி”. செய்தி கேட்டுப் பேச வார்த்தை இல்லாதவளாய் அமைதியாய் அமர்ந்து விட்டாள். பச்சிளம் குழந்தையின் இறப்பு, துக்க செய்தியாக இருந்தாலும் “அந்த குழந்தையின் இறப்பு குழந்தையினதும், தாயினதும் எதிர்காலத்திற்கு நன்மையானதே!” என எண்ணி தன் மனதைச் சமாதானப்

படுத்திக் கொண்டாள். இப்பாடசாலைக்கு வந்ததிலிருந்து அவள் பார்த்த பல சம்பவங்கள் அவளது மனதைப் பெரிதும் காயப்படுத்தியிருந்தது.

தனது ஆய்வின் முடிவில், மாணவர்களின் பல திறன்களை இனங்கண்டவளாய், அவர்களைப் பாராட்டி, ஊக்குவிக்க எண்ணி, தோட்டப் பாடசாலைகளிலேயே முதன்முறையாக வருடாந்த பரிசளிப்பு விழாவை நடாத்த ஏற்பாடு செய்தாள். இதற்கு அதிபரும் அதிக ஒத்துழைப்பு வழங்கினார். ஷர்மிளாவின் தலைமையில் சில ஆசிரியர்களின் உதவியுடன் மாணவர்களையேக் கொண்டு விழா ஏற்பாடுகள் நடைபெறலாயிற்று. இது மாணவர்கள் தனது திறன்கள், ஆளுமை என்பவற்றை வளர்க்க உதவியதோடு அவர்களுக்கு ஒரு அனுபவமாகவும் அமைந்தது.

பரிசளிப்பு விழா இனிதே ஆரம்பமானது. அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பாடசாலை மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். விழாவில் அவ்வருடம் நடைபெற்ற பரீட்சையில் அதிகப் புள்ளிகளைப் பெற்றோர், விளையாட்டு போட்டியில் தமது திறன்களை வெளிக்காட்டி சாதனை புரிந்தோர், தமிழ் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி என வலயத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர் என தமது பலவிதமான திறன்களை வெளிக்காட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

அத்தோடு அதிபரின் அனுமதியுடன் அன்று ஷர்மிளா ஒரு புத்தகத்தை வெளியிட்டாள். அனைத்து ஆசிரியர்களின் கரங்களுக்கும் வழங்கப்பட்ட அந்த புத்தகத்தில் அழகாக, மனதை கவரும் விதமாக அமைக்கப்பட்டிருந்த அந்த புத்தகத்தின் அட்டையில் கவிப்ரியன் என பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. இது எல்லோருக்கும் ஆச்சரியத்தைத் தந்தது. “யார் அந்த கவிப்ரியன்?” என்ற கேள்வி அனைவர் மனதிலும் உதயமாகியது. இவ்வேளையில் ஷர்மிளாவின் உரையும் மேடையில் அரங்கேறியது.

கூட்டத்திலிருந்த சலசலப்பை நீக்கும் நோக்கோடு, அவர்களது கேள்விக்கு முதலில் விடை அளிக்க தயாராகினாள் ஷர்மிளா. வந்திருந்தவர்களும், தமது கேள்விக்கு பதில் தேடும் நோக்கோடு ஷர்மிளாவின் உரைக்காகக் காத்திருந்தனர். அழகான செம்மொழியில் அவைக்கு வணக்கம்



கூறியவளாய், தனது உரையைத் தொடர்ந்தாள்.

“முதலில் உங்கள் அனைவர் மனதிலும் எழும், யார் இந்தக் கவிப்பிரியன்? என்ற கேள்விக்கான பதிலை கூற விரும்புகிறேன். அவன் வேறு யாருமல்ல, தனது கவிதைகளை தனக்குள்ளேயே மறைத்து வைத்து, அதனை தானே கிழித்து எறிந்த, தன் திறமையை தானே அறியாத மாணவன்.” என முன்னொரு நாள் வகுப்பில் நடந்த சம்பவத்தை வெளிப்படையாக கூறி, லீலா ஆசிரியரை இழிவு படுத்த முடியாதவளாய் கவிப்ரியனை மேடைக்கு அழைத்தாள். தானே அறியாத தனது திறமைகளை மேடையேற்றி, தன்னை வெளியுலகுக்கு சிறப்பானவனாக வெளிக்காட்டிய ஷர்மிளா டீச்சரை எண்ணி வியந்து போனான் கவிப்ரியன்.

கவிதை எழுதுபவர்கள் எல்லாம் காதலிப்பவர்கள் என எண்ணி, தன்னை இழிவுப்படுத்திய லீலா டீச்சரை எண்ணி நொந்துக் கொண்டான். எதிர்பாராமல் தனக்கு கிடைத்த அங்கீகாரத்தையும், பாராட்டையும் எண்ணி கண்களில் நீர் நிரம்பியவனாய் மேடையேறி, தனக்கான பரிசையும், புத்தகத்தின் பிரதியையும் பெற்றுக்கொண்டான். புத்தகத்தைத் திறந்து பார்த்தவனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. தான் கிழித்து எறிந்த கவிதைகள் அனைத்தும் புத்தகத்தில் எழுத்துருவம் பெற்றிருந்தன.

நடந்த சம்பவம் எல்லாவற்றிற்கும் துணையாக இருந்த பாலா சேர் கவிப்ரியன் அருகே வந்து, “நீ கிழிச்சி குப்பையில போட்ட கவிதைகளை எடுத்து, அத புத்தகமா வெளியிட்டிருக்காங்க ஷர்மிளா டீச்சர்.” என அமைதியும், ஆறுதலும் நிறைந்த குரலில் கூறினார். கவிப்ரியன் சொல்ல வார்த்தைகளின்றி நன்றியுணர்வுடன் ஷர்மிளா டீச்சரைப் பார்த்தான். அத்தோடு “லீலா டீச்சர் என்ன அசிங்கப்படுத்தி இருந்தாலும், கெட்டதுலயும் ஒரு நல்லதுன்ற மாறி அவங்களால எனக்கு ஒரு நல்லது நடந்திருக்கு” என மனதார லீலா டீச்சரை வாழ்த்திக் கொண்டான். அதேவேளை புத்தகத்தைப் பார்த்த லீலா டீச்சர், தான் செய்த தவறை எண்ணி தன்னைத் தானே திட்டிக் கொண்டாள்.

இவ்வேளையில் விழாவைப் பற்றியும், மாணவர்களைப் பற்றியும் பெருமையாக உரையாற்றிக் கொண்டிருந்தார் ஷர்மிளா டீச்சர். தொடர்ச்சியாக தான் இத்தனை காலம் மனதில் புதைத்து வைத்திருந்த சில விடயங்களை கூற இதுவே சந்தர்ப்பம் என




எண்ணி பேச்சைத் தொடர்ந்தாள். “மலையகத்தில் கவிப்ரியன் போன்ற பல இரத்தினங்கள் புதைந்து கிடக்கின்றார்கள். அவர்களைத் தேடி எடுத்து, வெளியுலகுக்குக் காட்டி மின்னச் செய்யும் பாரிய பொறுப்பு நம் அனைவர் கைகளிலும் உள்ளது. வறுமை தான் நம் வாழ்வு என்ற எண்ணம் மறந்து வறுமையிலும் செழுமையாக வாழ கற்றுக்கொள்ளுங்கள். நம் வறுமைக்குக் காரணம் என்ன? தேடிப் பாருங்கள்.

குறைகளை எமக்குள் வைத்துக்கொண்டு, மற்றவர்களைக் குறைக் கூற முடியாது. சம்பாதிக்கும் பணத்தில் அதிகமாக செலவு செய்வது, மதுவுக்கு என்பதை நீங்கள் யாரும் உணரவில்லையா இதுவரை? வறுமையையே தாரக மந்திரமாகக் கொண்டு சீரழிந்து போகும் நம் வாழ்வைக் கண்டு கொள்ளவில்லையா இதுவரை? வறுமைக்குத் தீர்வு தாய்மார் தன் பச்சிளம் குழந்தைகளை விட்டுவிட்டு வெளிநாடு செல்வதா? இதனால் நேரப்போகும் விளைவைப் பற்றி சிந்திக்கவில்லையா இதுவரை? ஒவ்வொரு மனிதனுக்கும் தன் இளம் பராயம் என்பது வசந்தமானதாகவே இருக்கும். ஆனால், நம் பிள்ளைகளின் நிலை என்ன? கற்கும் வயதில் சமையல் பொறுப்பை ஏற்று, அடுப்படியிலேயே காலத்தைக் கடத்துகின்றனர்.

தாய் விட்டு சென்ற தம் இளைய சகோதரர்களுக்குச் செவிலித் தாயாய் வாழ்ந்து, தம் இளமைக் காலத்தைக் கழிக்கின்றனர் பல சிறுமிகள். பக்குவமில்லாத வயதில் வழிநடத்த தாயில்லாமல், வழிதவறிப் போகின்றனர் பல சிறுவர்கள். கொலை, களவு, கொள்ளை என அவன் எவ்வழியில் சென்றாலும், தட்டிக்கேட்க யாருமில்லை. பாதுகாக்க வேண்டிய பெண் பிள்ளைகளையும் பாதுகாக்க இங்கு யாருமில்லை. மாறாக வக்கிரம் படைத்த பல மிருகங்களால் தன் வாழ்க்கையையே இழக்கின்றனர். சிறுவர் வாழ்வை காப்பதனூடாக எதிர்கால மலையகத்தையே காக்கலாம்.

இப்பூமியில் உதித்த ஒவ்வொரு குழந்தையையும் சாதனையாளராக மாற்றலாம். உங்களுக்குள் நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். உங்களால் மலையகத்தை மாற்ற என்ன செய்யலாம்? என..” என்று உரத்த குரலில் ஆரம்பித்து, அமைதியாக முடித்தாள் தன் உரையை.

அவையில் அமர்ந்திருந்த பலர் ஷர்மிளாவின் உரையில் இருந்த உண்மையை ஏற்று, தம் தவறுகளையும் உணர்ந்தவர்களாய் திடீரென நிசப்தமடைந்தனர். சிலர் அவர்களையே அறியாது வந்த கண்ணீரையும் துடைத்துக் கொண்டனர். செவிடன் காதில் ஊதிய சங்கு போல சிலர் கேட்டும், கேளாதவர்களாய் இருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது. இது எதிர்பார்த்ததே..! இப்படியும் சிலர் இல்லாதிருந்தால் மலையகத்திற்கு இந்நிலை வந்தே இருக்காது என எண்ணி, மேடையை விட்டு இறங்கினாள். பல மாணவர்களை மேடை ஏற்றிய பெருமிதத்தோடு...

**முற்றும்**




GGS
FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607

பூமிபுத்திரன்

# இஸ்லாமிய அணுகுண்டும் இஸ்ரேலின் அடாவடியும்

"1980களில் பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப்பதைத் தடுக்கும் நோக்குடன் சுவிற்சர்லாந்து மற்றும் யேர்மனி ஆகிய நாடுகளில் நடைபெற்ற மூன்று குண்டுவெடிப்புகளின் பின்னணியில், இஸ்ரேலிய உளவுப் பிரிவான மொசாட் இருக்கலாம்" என சுவிஸ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அது மாத்திரமன்றி 'இது அமெரிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்புடனேயே நடைபெற்றிருக்கக் கூடும்' என்ற தகவலும் வெளியிடப்பட்டுள்ளது.

"இஸ்லாமிய அணுகுண்டு" என மேற்குலகினால் வர்ணிக்கப்படும் அணுகுண்டை, பாகிஸ்தான் உற்பத்தி செய்வதில் மிக முக்கிய பங்களிப்பை வகித்தவர் பாகிஸ்தானின் அணுகுண்டு விஞ்ஞானியான அப்துல் காதிர் கான். பின்னாளில் இவரே, ஈரானின் அணுகுண்டுத் திட்டத்திற்கு வித்திட்டவராகவும் இருந்தார்.

1980களில் அணுகுண்டு உற்பத்தியில் பாகிஸ்தான் மும்முரமாக இறங்கிய போதில், அதனைத் தடுத்துவிட அமெரிக்கா பல வழிகளிலும் முயன்றது. பனிப் போர்க் காலகட்டமான அன்றைய காலகட்டத்தில், சோவியத் ஒன்றியத்தின் நட்பு நாடாக இந்தியா விளங்கியதால் பாகிஸ்தானைத் தனது நட்பு வளையத்தினுள் அமெரிக்கா வைத்திருந்தது. அந்த வேளையில் பாகிஸ்தானின் அணுகுண்டுத் திட்டத்தை நேரடியாக எதிர்க்க முடியாத கையறு நிலையில் இருந்த அமெரிக்கா, தனது முகவராகக் கருதும் இஸ்ரேலைப் பயன்படுத்திக் கொண்டது.



அணுகுண்டை உற்பத்தி செய்வதற்குப் பயன்படக் கூடிய அதேவேளை பொதுவான மின் உற்பத்தி உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் எந்திரங்களை சுவிற்சர்லாந்து மற்றும் யேர்மானிய நிறுவனங்களிடம் இருந்து பாகிஸ்தான் கொள்வனவு செய்தது. இந்த விற்பனையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பல வழிகளிலும் தொந்தரவுகள் வந்து சேர்ந்தன. அமெரிக்க இராஜதந்திரிகளும், இஸ்ரேலிய உளவுப் பிரிவினரும் அச்சுறுத்தல்களை விடுத்து வந்தனர். இது தொடர்பான முறைப்பாடுகள் உள்ளூர் காவல்துறையினரிடம் வழங்கப்பட்ட போதிலும், அவர்கள் அவற்றைச் சட்டை செய்யவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

அப்போதைய மேற்கு யேர்மனியின் தலைநகராக விளங்கிய பொன் நகரில் இருந்த இஸ்ரேலியத் தூதரகத்தில் பணியாற்றிய, 'டேவிட்' எனத் தன்னை அறிமுகம் செய்து கொண்ட ஒருவர், நேரடியாகவே அச்சுறுத்தல்களை விடுத்ததாக பின்னாளில் இடம்பெற்ற விசாரணைகளின் போது தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன.

மறுபுறம், இத்தகைய அச்சுறுத்தல்களுக்குப் பணியாத நிறுவனங்கள் தங்கள் விற்பனையைத் தொடர்ந்த வண்ணம் இருந்த நிலையில், சுவிஸ் நாட்டில் ஒரு இடத்திலும், மேற்கு யேர்மனியில் இரண்டு இடங்களிலும் சிறிய ரக குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப் பட்டன. 1981, பெப்ரவரி 21ஆம் திகதி, சுவிஸ் கூர் பகுதியில் 'கோரா என்ஜனியரிங்' நிறுவனத்தில் பணியாற்றும் ஒருவர் வீட்டில் முதல் தாக்குதல் நடைபெற்றது. அதே ஆண்டு மே 18இல் யேர்மனியின் மார்க்டோர்ப் பகுதியில் அமைந்திருந்த வலிஷ்மில்லர் நிறுவனத்தின் தொழிற்சாலையில் இரண்டாவது குண்டு வெடித்தது. மூன்றாவது குண்டு நவம்பர் 6ஆம் திகதி எர்லாங்கன் எனும் இடத்தில் அமைந்திருந்த பெரியாளர் ஹைன்ஸ் மெபுஸ் என்பவரின் அலுவலகத்தில் வெடித்தது. இந்தக் குண்டு வெடிப்பின் போது அவரின் செல்லப் பிராணியான நாய் இறந்து போனது.

இந்தக் குண்டுவெடிப்புகளுக்கு "தென்காசியாவில் அணு ஆயுதங்களை ஒழிப்பதற்கான அமைப்பு" உரிமை கோரியிருந்தது. இத்தகைய ஒரு அமைப்பு அதற்கு முன்னர் என்றுமே அறிமுகமாய் இருந்ததில்லை. அதற்குப் பின்னரும் அறியப்படவில்லை.

அதேவேளை, இந்தக் குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு அணுகுண்டு உற்பத்திக்குப் பயன்படக்கூடும் எனக் கருதப்பட்ட உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை விற்பனை செய்த வேறுபல நிறுவனங்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. அவ்வேளைகளில்,




அப்துல் காதிர் கான்

"வலிஷ்மில்லர் நிறுவனத்தில் நடைபெற்றது போல உங்களுக்கும் நடக்கும்" என மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

தம்வசம் அணுகுண்டை வைத்திருக்கும் நாடுகளான அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகியவை தமக்குப் பிடித்தமில்லாத நாடுகள் அல்லது எதிரிகள் எனக் கருதும் நாடுகள் அணுகுண்டு வைத்திருப்பதை விரும்புவதில்லை. அன்று பாகிஸ்தான் அணுகுண்டு உற்பத்தி செய்வதைத் தடுத்துவிட முயன்ற அந்த இரு நாடுகளும் இன்று, ஈரான் அணுகுண்டு உற்பத்தி செய்வதைத் தடுத்துவிட - சர்வதேச சட்டங்களையும் மீறி - எவ்வாறு முயற்சி செய்கின்றன? என்பதை நாம் அறிவோம். 1981 ஆம் ஆண்டில் நடைபெற்ற சம்பவங்களில் கூட அமெரிக்க அரசாங்கம் மேற்கு யேர்மனியுடனும், சுவிஸ் அரசாங்கத்துடனும் இராஜாங்க அடிப்படையில் தொடர்பு கொண்டு, பாகிஸ்தானுக்கு வேண்டிய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களின் விற்பனையைத் தடுத்துவிட முயன்றது. அது முடியாமற் போன நிலையிலேயே மொசாட்டின் உதவி பெறப்பட்டது. தற்போதும் அதே பாணியே ஈரான் விடயத்திலும் பின்பற்றப்பட்டு வருகின்றமையைக் காண முடிகின்றது. சதாம் ஹுசைன் காலத்தில் ஈராக்கிலும், கேணல் கடாபி காலத்தில் லிபியாவிலும் இதுபோன்ற நாசகார வேலைகள் நிகழ்த்தப்பட்டதை உலகறியும்.

பாகிஸ்தானின் முதலாவது அணுகுண்டுப் பரிசோதனை 1998, மே 28இல் நடைபெற்றது. பலுச்சிஸ்தான் மாநிலத்தில் நடபெற்றது. சாகை - 1 எனப் பெயரிடப்பட்ட இந்த வெடிப்பைத் தொடர்ந்து இரண்டாவது நாளில் சாகை - 2 பரிசோதனை அதே இடத்தில் நடைபெற்றது. அத்தோடு அணுவாயுதத்தைக் கொண்ட நாடுகளின் வரிசையில் பாகிஸ்தான் தன்னை இணைத்துக் கொண்டது. இன்றுவரை அணுவாயுதத்தைக் கொண்ட ஒரேயொரு முஸ்லிம் நாடாகவும் அதுவே விளங்கி வருகின்றது. இந்தச் சாதனையைச் சாத்தியப்படுத்திய அணு விஞ்ஞானி அப்துல் காதிர் கான் "பாகிஸ்தான் அணுகுண்டின் தந்தை" என இன்றுவரை நினைவு கூரப்படுகின்றார்.

1979இல் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சியைத் தொடர்ந்து, ஈரானில் மலர்ந்த புதிய ஆட்சி பாகிஸ்தானுடன் இணைந்து அணுகுண்டு உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டியது. 1987இல் சுவிஸ் நாட்டின் சூரிச் நகரில் உள்ள தங்கும்விடுதி ஒன்றில் நடைபெற்ற ஒரு சந்திப்பில் விஞ்ஞானி அப்துல் கதிர் கானை ஈரானின் அணுவாயுத சக்தி ஆணைக்குழு அதிகாரிகள் சந்தித்ததாகத் தெரிகின்றது. இந்தச் சந்திப்பில் ஆணைக் குழுவின் தலைவரான பெரியாளர் மசூட் நராகை தலைமையிலான ஒரு குழுவினர் பங்கு கொண்டிருந்தனர். இந்தச் சந்திப்பில் யேர்மன் பெரியாளர்களான கொத்தாட் லேர்ஹ் மற்றும் ஹைன்ஸ் மெபுஸ் ஆகியோரும் கலந்து கொண்டதாகவும் தெரிகின்றது. தொடர்ச்சியாக துபாயிலும் இது போன்ற சில சந்திப்புகள் நிகழ்ந்ததாகத் தெரிகின்றது.

இந்த விவகாரம் தொடர்பான ஆவணங்கள் இதுவரை 'வகைப்படுத்தப்பட்ட ஆவணங்கள்' என்ற பிரிவின் கீழ் பொதுமக்களின் பார்வைக்குக் கிட்டாமல் இருந்து வந்தது. 40 வருடங்களின் பின்னர் வெளிவந்துள்ள இந்த ஆவணங்கள் உலக அரசியலின் காட்டியாக உள்ளன. தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக் கொள்வதற்காக எந்தவொரு நாசகார நடவடிக்கையிலும் ஈடுபடவும், யாரை வேண்டுமானாலும் பலி கொடுக்கவும் தயாராக உள்ள நாடுகளே ஏனையோருக்கு மனித உரிமைகள் குறித்தும் ஜனநாயகம் குறித்தும் பாடம் நடத்துகின்றார்கள் என்பது எத்தகைய முரண்நகை?


V BOX
12+3
மாதங்கள்
~~€149~~
€119
Special OFFERS
வாடிக்கையாளர் அனைவருக்கும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்
Contact : 0151 4697 8484

மனோ

# காட்டிக் கொடுக்கும் துரோகிகளும் எங்களின் தலைவர்களும்...









அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பா.உ. இராசமாணிக்கம் சாணக்கியன் ஆற்றிய உரை சரித்திரப் புகழ் வாய்ந்தது எனலாம். முதலாவதாக அவர் முன்னாள் பட்டிருப்பு பா.உ. தமிழரசுக் கட்சியின் தொடக்க கால உறுப்பினருமான இராசமாணிக்கத்தின் தவப் புதல்வன் எனத் தெரிகிறது. எனவே, அவரது அரசியல் தமிழரசுக் கட்சிக்கே உரிய தனித்துவமாகக் கொள்ள முடியும்? அதென்ன தனித்துவம்? தாம் விரும்பாத எவரையும் துரோகிகள் என மக்கள் முன் காயடித்துக் கழுவேற்றறிக் கொன்று விடுவார்கள். கோழிக் கள்ளனே எம்மோடு சேர்ந்து கள்வனைப் பிடிப்பது போல ஒடித் தப்பித்து விடுவது போன்ற சாமத்திய சாலிகள்.

இந்தக் கலையைக் கச்சிதமாகச் செய்து காட்டிவர்களில் முதலிடத்தை பெற்றவர்கள் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும், அவரது காதல் மனைவி மங்கையர்கரசியும் என்பதை தமிழரசுக் கட்சியின் தேர்தல் மேடைகளை 1952 தொடக்கம் அவதானித்த கட்சித் தொண்டர்கள் நன்கறிவர்.

தந்தை செல்வா என்றாலே தமிழகத்துப் பகுத்தறிவுப் பகலவன் எனப் பிரச்சாரப் படுத்தப்படும் ஈ.வே.ரா. என்கிற அரசியல் வெங்காயத்தின் மறுவடிவமாகக் கட்சித் தொண்டர்களாலும், சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசனாலும் ஈழத்தமிழ் மக்களைப் பெற்ற மகராசனாகக் கட்டமைக்கப் பட்ட தந்தை.

தீப்பெரி பத்திரிகை ஆசிரியரால் 'கோழி சூப் காந்தி' எதையுமே அறியாமல், எல்லாவற்றையும் அறிந்தவராக 30 வருடங்களாக அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் காதால் கேட்டு, அவர் வாயால் பேசி தமிழ் மக்களையும், உலகத்தையும் நம்ப வைத்த அதிசயத் தலைவர். அவர் செய்த அரசியலே அவருடைய இறுதிக்கால கோமா உடல் நிலையில் உயிர் துறந்தது போன்ற அதிசய நிகழ்வுதான்.

*1952* தொடக்கம் எனது தொகுதியின் பெருமைக்குரிய உலகம் போற்றிய பா.உ. அவரைத் தொகுதியில் பார்த்த நாட்களை ஒரு கை விரல்களில் எண்ணி விடலாம். ஆனால், சுமார் *50* வருடங்களாக எங்கள் தொகுதிப் பிரதிநிதி. தமிழ் மக்களின் தந்தை தமிழரின் தலைவிதியை எழுதிய பிரம்மா. முடிவில் தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற முடியும் எனக் கையை விரித்து விட்டு மறைந்தார். மனமறிந்து ஏமாற்றனாரா? இல்லையா? என்பதல்ல எங்களிடம் எழுகின்ற கேள்வி.

தமிழ் இனம் ஏமாறியதா? ஏமாற்றப் பட்டதா? என்பதே இன்றைய கேள்வி. காலம் சென்ற விட்ட எவர் மீதும் வசை சொல்லக் கூடாது என்பது மனித மாண்பு. அதற்காக பொய் பேசிப் புகழ்பாடுவது தர்மமா? என்கிற கேள்விக்கு யார் பதில் தருவார். தர்மத்தின் தேவனாகப் பேற்றப்படும் தலைமையில் இயங்கிய கட்சி, தர்மத்தைக் கடைப் பிடித்ததா? அப்படி ஒரு பாரம்பரியத்தைக் கொண்டுள்ளதா? அதே வழியில் இராசமாணிக்கம் சாணக்கியன் அரசியல் செய்கிறாரா, இல்லையா? என்பதே நமது கேள்வி.

இங்கே தான் வானளாவ உயர்ந்து நிற்கிறார் சாணக்கியன். அதாவது கோழியை அறுக்காமல், கோழிக் குழம்பு சாப்பிடக் கேட்கிறார் சிங்கள அரசிடம். எப்படிப் பட்ட சிங்கள அரசு? *100* ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழரின் உழைப்பையும், உதிரத்தையும், உயிரையும், வாழ்வையும், வாழிடத்தையும் பறித்து, உண்டுக் கொழுத்து தமிழ் இனப் படுகொலைகளை இந்த நிமிடத்திலும் இன, மத வெறி கொண்டு, உலகை மிரட்டி வரும் அரசிடம் இப்படி ஒரு வரம் கேட்கிறார். குறிப்பாக 'அரசாங்கத்தைக் கவிழ்க்கவோஅல்லது விரட்டி அடிக்கவோ தாம் முயற்சிக்க வில்லை, நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்து, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வவே விரும்புகின்றோம்.' இவை போல எத்தனையோ புத்திசாலித் தனமான அறிவுரைகளை அள்ளி வீசி விட்டிருக்கிறார்.

அவை எல்லாம் வாக்காளப் பெருமக்களுக்கு படைக்கப் பட்ட வடை, பாயாசம் என்பதை எல்லா அரசியல் வித்தகர்களும் அறிவர். ஆனாலும், 'கூலிக்குக் குரக்கன் நடப்போனவள், வேலிக்கு வழக்குப் பேசினாளாம்' என்கிற கிராமத்து பேச்சுப் போல இருந்தது. பேர் மட்டும்தான் சாணக்கியன் என்பதை மறுக்க முடியாது.

ஈழத்துக் காந்தியே எங்களைக் கைவிட்டு ஓடி விட்ட நிலையில், இந்தச் சாணக்கியன் புடுங்கவா போகிறார்? என மற்றவர்கள் சொன்னாலும், நான் சொல்ல மாட்டேன். ஏன் என்றால், இவர் கூட்டு வைத்திருப்பது சுமந்திரன் என்கிற சகுனி. மகாபாரதத்தில் வந்தகாந்தாரம் எனப்பட்ட இன்றைய கந்தகார் வழியாக இந்தியாவுக்குள் வந்து, திருதராட்டிரன் என்கிற பார்வை இழந்த அரசனுக்குத் தன் தங்கை காந்தாரியை மணம் செய்து கொடுத்துப் பாண்டவர் மூலமாக திருதராட்டிரன் குலத்தையே அழிக்க வந்த யூதன் என ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

அத்தகைய சகுனியின் ஆற்றல் நிறைந்த ராஜ தந்திரிதான் சுமந்திரன். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினர்




என்பதை, அந்த உறுப்பினர் அட்டையின் படம் உறுதி செய்கிறது. இன்று அக்கட்சியின் பாரம்பரியத் தலைவர் ரலில் விக்கிரம சிங்க தேர்தலில் தோற்று, தேசியப் பட்டியலில் தனி ஒரு மரமாக 'எதிர்க் கட்சித் தலைவர் எனத் தன்னை அழைக்காதீர்கள்' எனப் பகிரங்கமாகப் பேசும் நிலைக்கு வந்து விட்டார்.

அவரின் வீழ்ச்சிக்கு சுமந்திரன்தான் காரணம் எனச் சொல்ல முடியாது. ஏனென்றால் அவரது பதவிவை மகிந்தர் சில வருடங்களுக்கு முன்னர் பறித்த பொழுது, சுமந்திரன் நீதிமன்றம் சென்று, ஆக்ரோசமாக வாதாடி, ரணிலுக்குப் பதவியை வாங்கிக் கொடுத்த வரலாறு சுமந்திரனுக்கு உண்டு.

ஏதோ ரணிலின் போதாத காலமோ, சுமந்திரனின் சகுனி வேலையோ ரணில் எங்காவது அரசமர நிழலில் ஒரு இடம் பிடிக்கிற நிலையில் உள்ளார். இப்பொழுது சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் தலைவர். அக்கட்சியில் பேராசிரியர் சிற்றம்பலம் உட்பட பலர் பல வருடங்களாகத் தவங்கிடந்தும் கிட்டாத தலைமைப் பதவி, சுமந்திரனுக்கு 2 வருடங்களில் தானாகக் கிடைக்கிறது என்றால் சும்மாவா?.

மேலே ஏத்திவிட சம்பந்தனின் சாணக்கியம், தூக்கி விட இந்திய அரசின் செல்வாக்கு, மேலே ஏற சக போட்டியாளர்களின் வாக்குகள். அவற்றைத் திருடிக் கொடுத்துப் பாராளுமன்றப் பதவி பெற்றுக் கொடுக்க இலங்கை அரச அதிகாரிகள். இவற்றை எல்லாம் நெறிப்படுத்திக் கொடுக்க இலங்கை - இந்திய - அமெரிக்க உளவுத் துறைகள். இப்படிச் சுமந்திரனின் விஸ்வரூபம் இருப்பதால், சாணக்கியன் சுமந்திரனைக் குருவாகக் கொள்ள எல்லாத் திறமைகளும் இருப்பதை மறைக்க முடியாது.

அதற்காக இலங்கை அரசை இப்படி மிரட்டுவது, ஏமாளி மக்களுக்கு நல்ல வாண வேடிக்கைக் காட்டப் பயன்படும். ஆனால், உலகத்தையே பச்சடி போட்டு வரும் சிங்கள அரசையும், அரசியல்வாதிகளையும் ஒன்றும் பண்ணமுடியாது என உங்களுக்கும் தெரியும். உங்களோடு பழகும் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் தெரியும். அவர்களுக்கு உங்கள் அசடு வழியும் சிரிப்பும், கூளைக் கும்பிடுகளும் ஏற்கனவே எமது தலைவர்கள் பயன்படுத்திய அசாத்தியத் திறமைகள்தான்.




top up · prices · My L-mobile · International

# L-mobi mobile

| Bundle | Details | Price |
|---|---|---|
| 100MB | 50MB + 50MB Gratis | €1 |
| 256MB | 128MB + 128MB Gratis | €2 |
| 512MB | 256MB + 256MB Gratis | €3 |
| 1GB | 512MB + 512MB Gratis | €4 |
| 2GB | 1GB + 1GB Gratis | €5 |
| 3GB | 1.5GB + 1.5GB Gratis | €6 |
| 4GB | 2GB + 2GB Gratis | €6,50 |
| 5GB | 2.5GB + 2.5GB Gratis | €7 |
| 6GB | 3GB + 3GB Gratis | €7,50 |
| 7GB | 3.5GB + 3.5GB Gratis | €8 |
| 8GB | 4GB + 4GB Gratis | €8,50 |
| 10GB | 5GB + 5GB Gratis | €9 |
| 12GB | 6GB + 6GB Gratis | €11 |
| 15GB | 7.5GB + 7.5GB Gratis | €13 |

Maandelijks opzegbaar
Geen aansluitkosten
Geen BKR controle

L-mobi mobile SIM ONLY — gratis simkaart
L-mobi mobile SIM ONLY — maand bundel
L-mobi mobile SIM ONLY — jaar bundel

Action! get 2= pay 1
With an annual bundle
worth 24.95
Get the 2nd SIM card for

**FREE!**

# A whole year for a fixed price!

**Reliable, affordable, accessible. For everyone.**



+31 20 363 62 31
cs@l-mobi.nl

Website : www.l-mobimobile.nl

Amstel Business Park Entrada 204,
1114 AA Amsterdam

*Available at*

JUMBO · coop · AKO · recharge.com · SENIORSTORE.NL · bp · OPWAARDEREN.NL · BELTEGOED.NL · Phone House · Primera · telecombinatie · BCC · OPTIE 1 Smart Living · SPAR · MCD mijn supermarkt

வி. சபேசன்

# எதிர்காலத்தில் புதிய சாமியார்களின் உருவாக்கம் அத்தனை இலகுவாக இருக்கப் போவதில்லை



அன்னபூரணி அரசு அம்மா என்கின்ற பெயர் ஒரிரு வாரங்களின் முன்னர் ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் பரபரப்பானப் பெயராக மாறியிருந்தது. வெளிவந்த வீடியோக்களில் ஒரு பெண், அம்மன் வேடம் அணிந்து, பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்தார். சில பக்தர்கள் அவர் முன்னால் விழுந்து கதறினார்கள். சிலர் முழங்காலில் நின்று கண்ணீர் விட்டார்கள். அவர் அடுத்ததாக எங்கே, எத்தனை மணிக்கு அருள்பாலிப்பார்? என்கின்ற தகவலும் இணையங்களில் வெளிவந்திருந்தது.

அவருடைய முகத்தைக் கூர்ந்து கவனித்த சிலருக்குப் பெரி தட்டியது. இந்த முகத்தை எங்கோ பார்த்திருக்கிறோமே! என்று யோசித்தார்கள். அவர்களில் யாரோ ஒருவர் கண்டுபிடித்து விட்டார். 2014இல் “சொல்வதெல்லாம் உண்மை” என்கின்ற தொலைக்காட்சி நிகழ்வில் அவர் கலந்து கொண்டிருந்தார். அதுவும் திருமணத்திற்குப் புறம்பான உறவு வைத்திருக்கின்ற ஒருவராக அந்த நிகழ்ச்சியில் குற்றம் சாட்டப் பட்டிருந்தார்.

இவர் “சொல்வதெல்லாம் உண்மை” நிகழ்வில் கலந்து கொண்டவர் என்பது தெரியவர, பலர் அந்த வீடியோவைத் தேடத் தொடங்கினார்கள். அந்த வீடியோ யூரூப் தளத்தில் இல்லாமல் போயிருந்தது. முன்னர் அது அங்கே இருந்தது. அன்னபூரணி அம்மா பற்றிய கேலி வீடியோக்களும் அங்கே இருந்தன. அவைகளையும் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியில் ஒருவர் அந்த வீடியோவை ஜீ தமிழ் தொலைக்காட்சியின் இணையத்தளத்தில் கண்டு பிடித்தார். அதன் பிறகு, அந்த வீடியோவின் காட்சிகள் சமூகவலைத் தளங்களிலும், ஊடகங்களிலும் பரவின.

திருமணம் ஆகியிருந்த அன்னபூரணி, தனது கணவரை விட்டுவிட்டு, ஏற்கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையும் ஆகியிருந்த அரசு என்பவரைக் காதலித்தப் பஞ்சாயத்துதான் அன்றைக்கு லட்சுமி ராமகிருஸ்ணன் முன் வந்தது. தாங்கள் ஏற்கனவே தமது குடும்பத்தைப் பிரிந்து விட்டதாகவும், இருவரும் இணைந்து வாழப் போவதாகவும் அன்னபூரணியும், அரசுவும் உறுதியாகத் தெரிவித்து விட்டனர். அரசுவின் குழந்தைகள் வந்து அப்பாவை வீட்டுக்கு வரச் சொல்லி கெஞ்சினார்கள். ஆனால், அரசு மறுத்து விட்டார். இதனால் சீற்றம் அடைந்த லட்சுமி ராமகிருஸ்ணன் அன்னபூரணியையும், அரசுவையும் கடுமையாகத் திட்டி அனுப்பி

விட்டார். ஒரு குடும்பத்தைக் கெடுப்பதாக அன்னபூரணி மீது லட்சுமி ராமகிருஸ்ணன் சீற்றத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அதே அன்னபூரணி ஏழு ஆண்டுகள் கழித்து, அம்மன் அவதாரம் எடுத்தார். அரசு என்ன ஆனார்? என்பது மர்மமாகவே இருக்கிறது. அரசு இறந்து விட்டார் என்று சொல்கிறார்கள். அரசுவின் சாவில் மர்மம் இருப்பதாகவும் பேசிக் கொள்கிறார்கள். அன்னபூரணி அரசுவின் சிலையை வைத்து வழிபட்டு வந்தார். அந்தச் சிலையை யாரோ உடைத்து விட்டார்கள் என்றும் ஒரு பேச்சு இருக்கிறது. அரசுவின் சக்தி தனக்குள் கலந்து விட்டதாக மட்டுமே அன்னபூரணி சொல்லிக் கொள்கிறார்.

அன்னபூரணி தற்பொழுது தான் கடவுள் இல்லை என்கிறார். முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார். தான் அருள் கொடுக்கவில்லை என்றும் சாதிக்கிறார். அவர் நடத்த இருந்த கூட்டங்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

ஒருவருடைய கடந்த கால வாழ்க்கையை வைத்து இப்படி அவரை அவமானப்படுத்துவது சரியா? என்கின்ற ஒரு கேள்வி இருக்கிறது. இதே அன்னபூரணி “சொல்வதெல்லாம் உண்மை” நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாமல் இருந்திருந்தால், இப்படி இவரை அம்பலப்படுத்தியிருக்க முடியுமா? ஆண்கள் தம்மை சாமியார்கள் என்று சொன்ன பொழுது, இப்படியான சிக்கல்களை அவர்கள் சந்திக்கவில்லை என்பதையும், அன்னபூரணி ஒரு பெண்ணாக இருப்பதனாலேயே இந்தப் பிரச்சனைகளைச் சந்திக்கிறார் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடவுள்கள், முனிவர்கள் தொடக்கம் பின்னர் வந்த பல சாமிகள் வரை பல்வேறு பெண்களுடன் உறவுகள் வைத்திருந்த கதைகள் இருக்கின்றன. ஏற்கனவே திருமணம் ஆகியிருந்த விசுவாமித்திரர், மேனகையுடன் வாழ்க்கை நடத்தி சகுந்தலையைப் பெற்றார். பின்னர் அவர்களை விட்டு விலகினார். பிரம்மரிசியும் ஆனார். இந்திரன் அகலிகையுடன் கூடினான். இதே போன்று பல்வேறு ஆண் கடவுளர்களின் கதைகள் போதும், போதும் என்கின்ற அளவிற்கு இருக்கின்றன.

ஒரு ஆண் எல்லாவற்றையும் செய்து விட்டு “ஞானம் பெற்றேன், வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்தேன்” என்றெல்லாம் தத்துவங்கள் பேசி, சாமியார் ஆகி விட முடிகிறது என்றால், அதே உரிமையைப் பெண்ணுக்கும் கொடுப்பதுதான் முறை.

இப்படி அன்னபூரணிக்கு நடந்தது அநீதி என்று சொல்வதற்கு ஒரு பக்கம் காரணங்கள் இருந்தாலும், இன்னொரு பக்கம் இதை வேறொரு கோணத்தில் இருந்தும் அணுக வேண்டி இருக்கிறது. சாமியார்களில் நல்ல சாமி, கள்ளச் சாமி என்கின்ற ஒன்று கிடையாது. தன்னை கடவுள் என்று சொல்கின்ற அனைவரும் போலிகளே!

சில குறிப்பிட்ட மதங்களில் கடவுள்கள் அவதாரம் எடுப்பதாகவோ, அல்லது தூதுவர்களை அனுப்புவார்கள் என்பதாகவோ, அல்லது தேர்ந்தெடுத்த மனிதர்களுடன் பேசுவார்கள் என்பதாகவோ இருக்கின்ற கதைகளை வாய்ப்பாக பயன்படுத்தி, சில மனிதர்கள் தம்மை கடவுளாகவோ அல்லது கடவுளுடன் பேசுபவர்களாக மக்களை நம்ப வைக்கின்றார்கள். முடிவில் மக்கள் ஏமாந்து போக, தம்மை கடவுள் என்பவர்கள் கோடிக் கணக்கில் சம்பாதிக்கின்றார்கள்.

இன்றைக்கு தம்மை கடவுள் என்று சொல்லிக் கொள்பவர்களின் ஆரம்பமும் ஏறக்குறைய அன்னபூரணி போன்று எங்கோ ஒரு மூலையில் சிறிது சிறிதாகத்தான் ஆரம்பித்தது. இன்றைக்கு அவர்கள் அரசாங்கங்களைக் கட்டுப்படுத்துகின்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சர் தொடக்கம், இந்தியாவின் பிரதமர் வரை இவர்களைப் போய் சந்திக்கின்றார்கள்.

இன்றைக்கு இருப்பது போன்ற தொழில்நுட்ப வளர்ச்சி அன்றைக்கு இருந்திருந்தால், இவர்களின் வளர்ச்சியை ஆரம்பத்திலேயே தடுத்திருக்கலாம். அன்னபூரணியை அம்பலப்படுத்திய நிகழ்வானது எதிர்காலத்தில் புதிய சாமியார்களின் உருவாக்கம் அத்தனை இலகுவாக இருக்கப் போவதில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. இதுவே இந்தச் சம்பவத்தில் நிம்மதி தரும் விடயமாக இருக்கிறது.

# Jaffna Stores

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

வாடிக்கையாளர் அனைவருக்கும்
தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்

## தை பொங்கலை முன்னிட்டு

**10.01.2022 முதல்**
**05.02.2022 வரை**

# சிறப்பு மலிவு விற்பனை




www.jaffnastores.com
info@jaffnastores.de

Tel. - 0521 174794
Mobile - 01732807906

**Feilenstraße 8**
**33602 Bielefeld**




தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

**மண்மணம் மாறாத சுவைதரும் தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**



அறிவழகன்

# மீளவும் முருங்கை மரமேறும் 13ஐ இறக்கப்போவது யார்..?

தமிழீழ நடைமுறை அரசு (புலிகள்) ஏற்கனவே முற்றுமுழுதாக நிராகரித்த 13 ஆம் திருத்தச் சட்டத்தை மீளவும், நுழைப்பதற்காகவும் இந்தியாவின் திட்டமிடுவதன்மூலம் எதுவித பலனும் ஈழத்தமிழருக்குக் கிட்டப்போவதில்லை என்பதைவிடவும், அதனால் இந்தியாவிற்கு எதுவித பலனும் கிட்டப்போவதில்லை என்ற உண்மையை இந்தியா உணரத் தலைப்படவில்லை என்பதே தெளிவான கூற்றாகும்.

2010 இல் அபிவிருத்திப் பணிகள் என்ற போர்வையில், இந்தியா எமது மண்ணில் காலடி வைப்பதற்கு முன்னதாகவே சிறிலங்கா அரசானது இந்தியாவிடமிருந்து கொள்கையளவில் தள்ளியே நிற்கிறது. ஆனாலும் தமிழ்த் தரப்புகளை உள்வாங்கியாவது இதனை நடைமுறைப்படுத்த இந்தியா முனைகிறது.

13ஆம் திருத்தத்தின் கீழான மாகாணசபைகள், உள்ளடக்கமற்ற வெற்று நிறுவனம் என்பதைப் பேசுவதற்கு அழுத்தமாகப் பெருமளவானத் தமிழ் தேசியத் தரப்புகள் அஞ்சுகின்றன.

இந்தியாவின் அழுத்தம் காரணமாக 13ஆம் திருத்தத்தில் கட்டமைப்பு சார் போதாமைகள் இருக்கின்றன என்பதைச் சொல்லுவதற்கு தமிழ் தரப்புகள் தயாரில்லை. கஜேந்திரகுமார் மட்டும் இதைப் பல இடங்களில் பேசிவருகிறார். உண்மையில் 13 ஆம் திருத்தத்தின் கீழான மாகாணசபைகளின் நிதிபலம் என்பது, மத்திய அரசு பார்த்து பிச்சை போட்டால்தான் உண்டு என்கிற நிலையில் தான் இருக்கின்றது.

அதாவது 13 ஆம் திருத்த சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் கூட, அப்பாவி மக்களின் குறைந்தபட்ச எதிர்பார்ப்பான நாளாந்த, உடனடிப் பிரச்சனைகளுக்குக் கூட எதையும் செய்ய முடியாது. அதே போல தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சனையான பௌத்த மயமாக்கல் மற்றும் காணிச் சுவீகரிப்பு போன்ற நெருக்கடிகளுக்கு 13 ஆவது திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக எந்தத் தீர்வையும் பெற்று கொள்ள முடியாது.

குறிப்பாக 13ஆம் திருத்தத்தின் கீழ் மாகாண அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் கூட, அரச காணிகள் தொடர்பில் மாகாண சபைகளுக்குக் குறிப்பிடத்தக்க அதிகாரம் எதுவும் இல்லை. மாகாணம் ஒன்றின் சட்டவாக்க அதிகாரங்களை எடுத்து கொண்டால், தேசிய கொள்கை என்கிற பெயரில், மாகாண அதிகாரங்களுக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பில், மத்திய அரசாங்கம் சட்டம் இயற்ற முடியும் என சொல்லப்படுகின்றது.

ஏன், மத்திய அரசாங்கம் தனது அமைச்சு ஒன்றின் சுற்றறிக்கைகள் மூலமாகவே, மாகாணசபை ஒன்றின் தீர்மானங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலைமைதான் இருக்கின்றது. அதாவது மாகாண சபை

ஒன்றின் அதிகாரத்திற்கு உட்பட எந்த விடயங்கள் தொடர்பிலும் அரசாங்கம் சட்டம் இயற்ற முடியும். அவ்வாறே, அவசர காலவிதி ஒன்றின் கீழ் மாகாணம் ஒன்றின் சட்டங்களை வலுமையற்றதாக்கும் அதிகாரம் இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

அதே போன்று மாகாணக் கட்டமைப்பின் கீழான பொலிஸ் அதிகாரங்கள் பற்றி பலரும் பேசுகின்றார்கள். ஆனால், மாகாணத்திற்குரிய பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தினால், மாகாண பொலிஸ் அதிகாரிகள் சீருடை அணிந்து, நித்திரை கொள்ள மட்டுமே அதிகாரம் உள்ளவர்களாக இருப்பார்கள். இது போதாதென்று, மாகாணசபை முதலமைச்சரிடமும், அமைச்சரவையிடமும் எவ்விதமான நிறைவேற்றுத் துறை அதிகாரங்களும் கிடையாது. குறிப்பாக மாகாண சபை ஒன்றின் முதலமைச்சர் ஒருவருக்கு மட்டும் பொறுப்புக் கூறும் ஒரு அரச ஊழியர் தானும் இல்லை என்பதே உண்மையான நிலையாக இருக்கின்றது. அதாவது சாதாரண கிராம சேவையாளர் ஒருவருக்குக் கூட கட்டளை இடும் அதிகாரம் மாகாணசபை ஒன்றுக்கு கிடையாது.

ஆனால், மாகாண சபையின் நிறைவேற்றுத்துறையில் ஆளுநர் பரம்பொருளுக்கு நிகரான அதிகார நிலையைக் கொண்டு இருக்கிறார். குறிப்பாக மாகாணப் பொதுச் சேவையின் முழுக் கட்டுப்பாடும் ஆளுநரிடமே இருக்கிறது. மாகாணப் பொது ஊழியர்களை நியமிப்பது, நீக்குவது, ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது போன்ற சகல விடயங்களும் ஆளுநரின் அதிகாராதிற்குட்பட்டவை என 13 ஆம் திருத்த சட்டம் சொல்லுகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஒற்றையாட்சி தத்துவத்திற்கு உட்பட்டிருக்கும் 13ஆம் திருத்ததிற்கு பிளஸ் (13+) கேட்க முடியாது. ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் 13ஆம் திருத்தும் அதியுச்சமான அதிகாரப் பகிர்வு என்று 1987 இல் இலங்கை உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்து விட்டது.

அந்தவகையில் அப்பாவி மக்களுடைய அன்றாடப் பிரச்சனைகளுக்குக் கூடத் தீர்வுகளைத் தர முடியாத, அடிப்படையில் வலுமையற்ற, அருவமும் உருவமுமற்ற 13ஆம் திருத்தத்தினை இந்திய தொடர்ச்சியாக தமிழ் தேசிய தரப்புகள் ஊடக திணிக்க முயலுவது ஏன்? இந்திய இலங்கை ஒப்பந்தத்தைப் பாதுகாத்துக் கொள்ளத்தான். ஆனாலும் இந்த முயற்சி மிகத்தாமதமானதாகும். தமிழ்த் தரப்பாகத் தம்மைத்தாமே கூறிக்கொள்ளும் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுமந்திரன் ஆகியோரூடாக 13 ஐ மீளக்கொண்டுவர முனையும் இந்தியா, மேற்கூறிய தரப்புகளின் ஊடாக ஈழத்தமிழர் விரும்பி வேண்டுவதாலேயே 13 ஐ கொண்டு வரப்படுவதுபோன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்த முயல்கிறது. அதற்காக மீளவும் தமிழரைப் பகடைக்காயாக்க முயல்கிறது.

அதாவது இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஊடாக இலங்கையின் பாதுகாப்பு வெளியுறவுக் கொள்கையில் முதன்மையான இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதுதான் இந்தியாவின் ஒரே நோக்கமாக இருக்கின்றது. ஏனெனெறால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் இந்தியாவுக்குச் சாதகமானது.

குறிப்பாக இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்தியாவின் நன்மைக்கு எதிரான சீனா உட்பட எந்தவோரு நாட்டுடனும் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் இணைய முடியாது. இதற்க்காகத் தான் இந்திய இலங்கை ஒப்பந்தம் மற்றும் 13 ஆம் திருத்தத்தைத் தமிழ் மக்கள் மீது திணிக்க இந்தியா முயலுகின்றது.






வாடிக்கையாளர் அனைவருக்கும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்

Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

IMPOrtas
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch

மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

ப்ரியமதா பயஸ், தமிழீழம்

# வடக்கு கிழக்கின் தற்போதைய அரசியல்




இன்றைய தமிழர் அரசியல் நிலைமை 'யாரும் தமிழனைக் காப்பாற்ற முடியாது' என்கின்ற சோகமான நிலைமைக்குத்தான் சென்றிருக்கின்றது. அதனை விட நாடு பெரும் அரசியல் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி இருக்கிறது. ஏன் இந்த அரசைத் தெரிவு செய்தோம்? என பெரும்பான்மை மக்களும் தலை குனியும் அளவுக்கு, நாட்டில் ஆட்சி இருக்கிறது. இருந்தும் வடக்கு, கிழக்கில் சீனாவின் தலையீடு மெல்ல மெல்ல முகில் விடுகிறது. இதை யாரும் கண்டு கொள்வதாயும் இல்லை, கேட்டுக்கொள்வதாயும் இல்லை.

இந்தியாவுடனான இலங்கையின் புதிய ஒப்பந்தத்தின் பிரகாரம், திருகோணமலை எண்ணெய் தாங்கிகள், இந்தியாவுக்கு 50 வருட குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலையில், இந்த ஒப்பந்தம் அடுத்துவரும் ஒரு வாரத்தில் அதாவது ஜனவரி முதல் வாரத்தில் கைச்சாத்திடப் படவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். அவரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

டிரின்கோ பெட்ரோலியம் டெர்மினல் பிரைவேட் (*Trinco Petroleum Terminal*) லிமிடெட் சிலோன் பெற்றோலிய கூட்டுத்தாபனம் (*CPC*) மற்றும் லங்கா ஐ.ஓ.சி (*LIOC*) உடன் இணைந்து திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை அபிவிருத்தி செய்யவுள்ளது. அதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இலங்கை - இந்திய எண்ணெய் தாங்கி உடன்படிக்கையானது பல மில்லியன் டொலர் பெறுமதியானது என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 61 எண்ணெய் குதங்கள், களஞ்சியசாலையை அபிவிருத்தி செய்வதற்காகப் புதிதாக அமைக்கப்பட்ட *Trinco Petroleum Terminals Ltd* மூலம் நிர்வகிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பான ஒப்பந்தம் ஒரு வாரத்தில் கையெழுத்தாகுமென அறியமுடிகின்றது. புதிய ஒப்பந்தத்தின் பிரகாரம், திருகோணமலை எண்ணெய் தாங்கிகள், இந்தியாவுக்கு 50 வருட குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலையில், இந்த ஒப்பந்தம் அடுத்துவரும் ஒரு வாரத்தில் கைச்சாத்திடப் படவுள்ளது எனவும் பரபரப்பாக பேசப்படுகிறது. இதைவிட இந்தியாவின் கடனுதவித் திட்டத்தின் கீழ், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 32-35 ஆசனங்கள் கொண்ட 500 பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக, 2020 ஜனவரி மாதம் 08ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்திருந்தது.

அதற்கமைய, பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக, முற்கூட்டிய தகைமைகளைக் கொண்ட 03 நிறுவனங்களிடமிருந்து போட்டி விலைமுறிகளும் கோரப்பட்டுள்ளது. குறித்த விலைமுறிகளின் மதிப்பாய்வின் பின்னர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப் பட்டுள்ளப் பரிந்துரைகளுக்கமைய, 32 ஆசனங்களைக் கொண்ட 500 பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக, இந்தியாவின் அசோக் லேலண்ட் கம்பனிக்கு வழங்குவதற்குப் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

'அக்கா, தங்கை வீட்டுக்கு பிட்டும், ரொட்டியும் கொடுத்துவிட்டு சோறும், இடியாப்பமும் வாகுவதுபோல' நிலைமை இப்படி மாறி இருக்கிறது. ஆனது ஆகட்டும் என்று விட்டுவிடமுடியாத நிலையில், மக்கள் இருக்கையில் அரசியல் தலைமைகள் இவை பற்றி வாயும் திறக்காமல் உள்ளது, மக்கள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தைக் கிளப்பியுள்ளது.

திருகோணமலை தமிழர்களின் பூர்வீக பூமி. அங்கே தமிழனுக்கு என்று எதுவும் இல்லை. கன்னியா வெந்நீரூற்றை பார்வையிடப் போனாலும், சிங்களத்தில் முற்றும் முழுதாக அச்சிடப்பட்ட அனுமதி சீட்டுக்களே மக்களுக்கு வழங்கப் படுகின்றது. ஆனால், தேவை அற்ற விடயங்களுக்குத் தம்மைக்குள்ளானப் போட்டிகளுக்குத் தமிழர் தரப்பு வீதியில் இறங்கி, கொடிப் பிடித்துப் போராடுவது நகைப்புக்குரிய விடயம் அன்றி, பெரு என்னவாக இருக்கும்?

திருகோணமலையில் இப்போது இந்தியாவின் கைவசம் போகப்போகும் வளங்கள், தமிழர்களின் முக்கிய வளங்கள். இவை காணி அபகரிப்பு, குடியேற்றம் தரப்படுத்தல் என சூறையாடப்பட்டு, எங்கோ போய் சேருகிறது. இதை யாரும் கண்டுகொள்வதாக இல்லை. அபிவிருத்தி என்பதைவிட, இலங்கைக்கானப் பொருளாதார நெருக்கடி, இத்தனை



விடயங்களையும் செய்யத் தூண்டுகின்றது. இலங்கைக்குச் சுயமான உற்பத்திசார் செயற்பாடு தொடர்பில் அக்கறை அற்றுப்போய், நாட்டைத் துண்டு துண்டுகளாக கடன் வாங்கிய நாடுகளுக்குக் கூறுபோடும் நிலைமை இன்னும் இன்னும் வலுப்பெற போவதை யாரும் தடுக்கமுடியாது என்கின்ற நிலைமை வந்துவிட்டதா?



இலங்கையின் ஏனைய முக்கியப்பகுதிகளை சீன ஆக்கிரமித்து இருப்பது, பழைய கதையாகி போயிருக்கிறது. கொழும்பு துறைமுக நகரம் ***(Port City)*** என அழைக்கப்படும் கொழும்பு சர்வதேச நிதி நகரம் ***(Colombo International Financial City, CIFC)*** ஏற்கனவே தாரைவார்க்கப்பட்டு விட்டது. இது இலங்கையின் தலைநகர் கொழும்பில் அமைந்துள்ள ஒரு சிறப்புப் பொருளாதார வலயமும், பன்னாட்டு நிதி மையமும் ஆகும். இக்கரையோர நகரம் காலிமுகத் திடலிற்கு அண்மையாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இதற்கான நில மீட்புப் பணிகள் 2018 ஜனவரி 2018யில் நிறைவடைந்தன. முழுத் திட்டத்திற்குமான செலவு 15 பில்லியன் அமெரிக்க டொலராக 2017ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டம் சீனாவின் “பட்டை ஒன்று பாதை ஒன்று” என்ற முயற்சியின் ஒரு பகுதியாகும். இந்நகரம் கொழும்பு துறைமுக விரிவாக்க செயற்றிட்டதின் கட்டுமான வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஒரு முக்கிய நகர திட்டமாகும்.

2021 ஆம் ஆண்டு, மே மாதம் 20 ஆம் திகதி அன்று, இலங்கை நாடாளுமன்றம் கொழும்பு துறைமுக நகர் ஆணைக்குழு நிறுவுவதற்கான சட்டமூலத்தை 2021, மே 20 அன்று, 91 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றியது. இதற்கும் இலங்கை மக்கள் பலவகைகளில் எதிர்ப்புகளை வெளியிட்ட போதும், அரசு தனப் போக்கில் குறியாக இருந்து, அதை நிறைவேற்றி விட்டது. இப்போது சீனா வடக்கு கிழக்கிலும் கண்வைத்து இருக்கிறது. இந்த நிலைமை எங்கே போய் முடியும்? எமது பாரம்பரியங்கள் மற்றும் பழமையை நாம் இழந்துவிடுவோமா? என்கின்ற பெரும் ஏக்கம் இப்போது எழுந்திருக்கிறது. இவற்றை எமது தேசிய அரசியல்வாதிகள் கவனிப்பார்களா? என்கின்ற ஆவலில் வடக்கு கிழக்கு மக்கள் காத்திருக்கின்றனர்.





CENTURY
TRAVELS GMBH
SUMMER 2022
Frankfurt Direct Flights
JAN 01 - MAR 31
AB 695€
40 KG
APR 01 - JUL 12
AB 725€
SriLankan
PACKAGE
€99
5 STAR SERVICE
திகதி மாற்றம் இலவசம்
Date Change FREE
4 கிழமைக்குள் பணம் திருப்பித் தருதல்
Refund Within 4 WEEKS
இலங்கை விசா
~~60~~ 40
Srilanka Visa
~~60~~ 40
பதிவேற்றம் (Declaration Form)
Self Declaration Form
Corona Travel Information
Nishanthan 0176 2168 2149
0231 58 96 557 | 0231 55 74 319
Rheinische Str.29-44137-Dortmund
www.centurytravels.de
info@centurytravels.de

# V BOX GERMANY



**Special OFFERS**



## 12+3 மாதங்கள்

~~£149~~ **€119**

**40+ SPORTS CHANNELS AVAILABLE**

MANY MORE...

## WITH OVER 300 CHANNELS & 5000 MOVIES

### REACH OUR DISTRIBUTORS

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**GERMANY :**
0049 15146978484
0049 17670334213
0049 62063052893

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168

**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780